காரணமானவன். 'அவன் இங்கே எப்படி?'

'அயர்லாந்தில் பார்த்தவன், இங்கே பாரிசில் கிராண்ட் ஹோட்டலில் எப்படி?'

டர்ஃபினுக்குள் எதுவோ பளிச்சிட... லிஃப்டின் கதவுகள் மூடிக்கொள்ளுமுன், அதிலிருந்து வெளிப்பட்டு,

"நான்படிலவர்றேன்...நீங்கமுன்னாடி போங்க." என்று மற்றவர்களுக்கு சொல்லிவிட்டு பரபரப்பாய் நடந்தார்.

ஹோட்டல் மேனேஜர் அறைக்குச் சென்று, லிஃப்ட் ஆபரேட்டர் குறித்துக் கேட்க... கேட்க...

திடீரென்று லிஃப்டில் பயங்கர சத்தம்.

மேலேறிய லிஃப்ட் கேபில் அறுந்து, கீழே விழுந்து நொறுங்கியது! எங்கும் ஓலம்!

லிஃப்டில் பயணித்த அத்தனை பேரும் இறந்து போனார்கள்.

அந்த லிஃப்ட் ஆபரேட்டர் உட்பட!

இருந்த போதும் அந்த லிஃப்ட் ஆபரேட்டர் யார் என்பதற்கான தகவலை யாராலும் சொல்ல இயலவில்லை. புதிர்மயமான விஷயம் என்று பத்திரிகைகள் பலவாறாய் சொல்லிய போதும்...

டர்ஃபினைப் பொறுத்தவரை... 'தன்னைத் துரத்திய மரணம்தான் அது' என்று எண்ணினார்!

லிஃப்டில் நுழைந்த விநாடியில் அவருள் ஒளிர்ந்த இண்டலிஜென்ஸ்தான் அவரது உயிரை மீட்டது(!?) ✱


**க்ரைம் நாவல் ஸ்பெஷல்**

ஓராண்டு சந்தா ரூ. 120.00

ஆறு மாத சந்தா ரூ. 60.00

அனுப்ப வேண்டிய முகவரி:
ஜீயே பப்ளிகேஷன்ஸ்
6/352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.




# மேனகாவின் மே மாதம்!

## - ராஜேஷ்குமார்

## 1



விடியற்காலை மூன்றுமணி.

கரிசல்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்பாய் சிமெண்ட் லோடு ஏற்றிய அந்த லாரி புயல் வேகத்தில் புழுதி பறக்க வந்து கிரீச்சென்ற சத்தத்தோடு பிரேக்கிட்டு நின்றது.

கழுத்துக்கு மப்ளர் சுற்றிய அந்த டிரைவர் லாரியிலிருந்து குதித்து பதட்டமாய் ஸ்டேஷனுக்கு ஓடினார். சென்ட்ரி கான்ஸ்டபிள் ஒருவர் ஸ்டூலில் உட்கார்ந்தபடி கோழித் தூக்கம் போட்டுக் கொண்டிருக்க, டிரைவர் வியர்த்து வழியும் முகத்தோடு இன்ஸ்பெக்டரின் அறைக்குள் எட்டிப்பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் காக்கி யூனிஃபார்ம்க்கு விடுதலை கொடுத்துவிட்டு பனியன் லுங்கியோடு நாற்காலிக்குள் தளர்வாய் உட்கார்ந்து கண்களை மூடியிருந்தார். தலைக்கு மேல் ஹரப்பா - மொகஞ்சதாரோவிலிருந்து கொண்டுவரப்பட்ட தினுசில் இருந்த ஃபேன் யோசித்து யோசித்துச் சுற்றிக் கொண்டிருந்தது.

"டிரைவர்" குரல் கொடுத்தார்.



"ஸார்..."

இன்ஸ்பெக்டர் குணசேகர் சட்டென்று விழித்துக் கொண்டு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். தூக்கம் கெட்ட சிவப்பு விழிகளோடு லாரி டிரைவரை ஏறிட்டார்.

"என்ன?"

"ஸார்... நான் ஒரு லாரி டிரைவர். என் பேர் காசி."

"என்னவிஷயம் சொல்லு..." ஒரு கொட்டாவிவிட்டுக் கொண்டே குணசேகர் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தார்.

"ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்துபோச்சு ஸார்."

குணசேகரின் கொட்டாவி பாதியிலேயே நின்றது. "எ... என்னது... ஆக்ஸிடெண்ட்டா...?"

"ஆமா ஸார்... ஒரு டாடா சுமோ கார் புளிய மரத்துல மோதி எட்டுப் பேர் ஸ்பாட்லயே அவுட் ஸார்."

நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார் குணசேகர்.

"ஆக்ஸிடெண்ட் ஸ்பாட் எது...?"

"இங்கிருந்து நாலு கிலோ மீட்டர் தள்ளி இருக்கிற கருவேலங்குப்பம் வளைவில ஸார்..."

"எப்ப நடந்தது இந்த ஆக்ஸிடெண்ட்...?"

"ஒரு அரைமணி நேரத்துக்கு முன்னாடி நடந்து இருக்கும்போல தெரியுது ஸார்... ஆள் நடமாட்டம் இல்லாதஏரியா அது. ஆக்ஸிடெண்ட் நடந்தது யாருக்குமே தெரியலை ஸார். நான்தான் லாரியை நிப்பாட்டி ஹெட்லைட் வெளிச்சத்தை அடிச்சு யாராவது பொழைச்சிருக்காங்களான்னு பார்த்தேன். யாரும் உயிரோடு இருக்கிற மாதிரி தெரியலை. மேற்கொண்டு என்ன செய்றதுன்னு தெரியாததால உங்களுக்குத் தகவல் கொடுக்க வந்தேன் ஸார்..."

குணசேகர் பரபரவென்று யூனிஃபார்ம்க்குள் நுழைந்து கொண்டே பக்கத்து அறையை எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"கந்தசாமி..."

எழுந்து வந்தார்.

"ஸார்..." தூக்கக் கலக்கத்தில் சைட்டார்.

"ரோந்து போயிருக்கிற எஸ்.ஐ.யும் கான்ஸ்டபிள்களும்

வந்துட்டாங்களா?"

"வரலை ஸார்."

"சரி... ஜீப்பை ரெடி பண்ணு. கருவேலங்குப்பம் வளைவுல ஒரு மோசமான ஆக்ஸிடெண்டாம். எட்டுப் பேர் ஸ்பாட்டுலயே போய்ட்டாங்களாம். நான் ஜீப்பை எடுத்துக்கிட்டு ஸ்பாட்டுக்குப் போறேன். எஸ்.ஐ. வந்தா தகவல் சொல்லி அனுப்பி வை. அப்படியே ஹாஸ்பிட்டலுக்கும் போன் பண்ணி வேன் அனுப்பச் சொல்லிடு..."

"எஸ்... ஸார்..."

"இந்த லாரி டிரைவரோட பேர், அட்ரஸ், லாரி நம்பர் எல்லாத்தையும் டீடெய்லா எழுதி வாங்கிட்டு அனுப்பிடு..."

"எஸ்... ஸார்..."

குணசேகர் யூனிஃபார்முக்குள் முழுமையாய் தன்னைத் திணித்துக் கொண்டு வெளியே வந்தார்.

வாசலில் சாயம் போன அந்த ஜீப் கனைத்தபடி காத்திருக்க தாவி ஏறினார்.

குளிர்காற்றை வெட்டிக்கொண்டு ஜீப் பறந்தது.

ஐந்தே நிமிஷம்!

கருவேலங்குப்பம் வளைவு வந்தது. ரோட்டோரமாய் ஒரு தனியார் பயண பஸ்ஸும் இரண்டொரு கார்களும் தெரிந்தன. பஸ் பயணிகளில் சில பேர் புளிய மரம் அருகே நின்றபடி பேசிக்கொண்டிருந்தார்கள். ஜீப்பைப் பார்த்ததும் கும்பலில் இருந்த ஒருவர் குரல் கொடுத்தார்.

"போலீஸ் வந்தாச்சு..."

குணசேகர் ஜீப்பை விட்டு இறங்கும் போதே மசமசப்பான இருட்டில் அந்தக் காட்சியின் கொடூரம் கண்களுக்குள் ஒரு ஊசி மாதிரி பாய்ந்தது.

டாடா சுமோ, புளிய மரத்தின் அடிப்பாகத்தில் சொருகிக் கொண்டு நசுங்கிய டால்கம் பவுடர் டப்பா மாதிரி தெரிய, காரின் சில பாகங்கள் தீப்பிடித்துப் பெட்ரோல் வாசனையோடு புகைந்து கொண்டிருந்தன. ஒரு பெண்ணின் உடல் அடி மரக்கிளையில் சிக்கிக் கொண்டு சலனமில்லாமல் தொங்கியது. வாகனங்களின் ஹெட்லைட் வெளிச்சத்தில்



ரத்தக்கறை படிந்த லக்கேஜ்கள் சிதைந்து கிடந்தன.

குணசேகர் பக்கத்தில் போய் காரின் நசுங்கிய பகுதிகளை எட்டிப் பார்த்தார். ரத்தத்தில் நனைந்த உடல்கள் விதவிதமான போஸ்களில் தெரிந்தன.

எண்ணினார்.

மொத்தம் எட்டு உடல்கள்.

நான்கு ஆண்கள். நான்கு பெண்கள்.

கும்பலில் இருந்த இரண்டு இளைஞர்கள் இன்ஸ்பெக்டர் குணசேகருக்கு முன்பாய் வந்து நின்றார்கள்.

"ஸார்... உடல்களை எடுத்து வெளியே கிடத்திப் பார்த்தாதான் உயிர் இருக்கா போயிருக்கான்னு தெரியும். நீங்க சரின்னு சொன்னா போதும் உடல்களை வெளியே எடுக்க நாங்க ஹெல்ப் பண்றோம்..."

குணசேகர் தலையசைக்க இரண்டு இளைஞர்களும் பரபரவென்று செயல்பட்டார்கள். மரத்தின் கிளையில் தொங்கிக் கொண்டிருந்த பெண்ணின் உடலைக் கீழே இறக்கி முதல் முதலாய் கிடத்திவிட்டு, காரின் இடிபாடுகளை அகற்றி ஒவ்வொரு உடலாய்க் கொண்டு வந்தார்கள்.

நான்கு பெண்கள் இரண்டு ஆண்களை சடலங்களாய் கிடத்தி விட்டு மீதி இரண்டு ஆண்களை இடிபாடுகளிலிருந்து இழுத்தபோது அந்த முனகல் சத்தம் கேட்டது.

"ம்... ம்... ம்... ம்..."

"ஸார்... ரெண்டு பேர்ல ஒருத்தர் உயிரோட இருக்கார்..."

"மொதல்ல அவரை எடுங்க..."

எடுத்தார்கள்.

கையிலும் காலிலும் மட்டும் அடிபட்டிருக்க மனிதர் அரை மயக்கத்தில் இருந்தார். வயது நாற்பதிலிருந்து ஐம்பதுக்குள் என்று ஊகிக்க முடியாத ஒரு வயதில் இருந்தார். மூக்குக் கண்ணாடி நொறுங்கிப் போயிருக்க, அணிந்திருந்த வெள்ளைச் சட்டையும் வேஷ்டியும் கையில பெருகியிருந்த இரத்தத்தின் காரணமாக கம்யூனிஸ்டாக மாறியிருந்தது.

அவரை சாய்வாக உட்கார வைத்து மினரல் வாட்டர் புகட்ட, அந்த நபர் தலையை மெல்ல நிமிர்த்தி சோர்வாய்

கும்பலை ஒரு பார்வை பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் குனிந்து மெல்லிய குரலில் கேட்டார்.

"வண்டி எப்படி ஆக்ஸிடெண்ட் ஆச்சு...?"

அந்த நபரின் உதடுகள் பயத்தில் துடித்தன.

"வ... வண்டியில் திடீர்ன்னு பிரேக் ஃபெய்லியர். டர்னிங்ல வண்டியைத் திருப்பும் போது கண்ட்ரோல் பண்ணமுடியலை... தூக்கக் கலக்கம் வேற. நல்ல ஸ்பீட்ல வந்த வண்டி மரத்துல மோதிடுச்சு... வண்டியை ஓட்டினது நான்தான்..."

"நீ டிரைவரா...?"

"ஆமாங்கய்யா..."

"இது யார் வண்டி...?"

"மில் ஓனர் ராஜேந்திரபாபு வோட்டதுங்க" சொன்ன டிரைவர் மெல்லத் திரும்பி சுற்றும் முற்றும் பார்த்தார். பின் குரல் நடுங்கக் கேட்டார்.

"கார்ல வந்தவங்களுக்கு என்னாச்சு...?"

குணசேகர் சொன்னார். "உன்னைத் தவிர கார்ல வந்த மத்த ஏழு பேரும் ஸ்பாட்லேயே அவுட். இவ்வளவு பெரிய விபத்துல நீ உயிர் பிழைச்சது பெரிய அதிசயம்."

டிரைவர் சிறிது நேரம் அதிர்ந்து போனவராய் மௌனம் காத்துவிட்டு குணசேகரை ஏறிட்டார்.

"செத்துப் போனது எத்தனை பேர்ன்னு சொன்னீங்கய்யா?"

"ஏழு பேர்..."

"இருக்காதுங்கய்யா. வண்டியில என்னையும் சேர்த்து மொத்தம் ஏழு பேர்தான் இருந்தோம். நான் ஒருத்தன் உயிரோடு இருக்கேனே, செத்தது ஆறு பேர்தானே...?"

குணசேகர் திரும்பி நின்று வரிசையாய் கிடத்தப்பட்டிருந்த உடல்களை எண்ணிப் பார்த்தார்.

ஏழுபேர்.

மூன்று ஆண்கள். நான்கு பெண்கள்.

"நீயே... பாரு... எத்தனை பேர்ன்னு."

டிரைவர் அடிபட்ட வேதனையையும் மறந்து தவிப்போடு எழுந்து திரும்பிப் பார்த்தார். லேசாய் முகம்



மாறினார்.

"அ... அய்யா..."

"என்ன... கணக்கு சரியா?"

"இல்லீங்கய்யா..."

"என்ன இல்லை...?"

"அய்யா... இந்த வண்டியில என்னையும் சேர்த்து நாலு ஆண்கள் மூணு பெண்கள் இருந்தோம்."

"மூணு பெண்களா?"

"ஆமாங்கய்யா."

"அதெப்படி... இங்கே நாலு பெண்கள் செத்துக் கிடக்கறாங்களே...?"

"அய்யா... அந்த டார்ச் லைட்டை கொஞ்சம் வாங்கிக் கொடுங்க..."

ஒருவரின் கையில் இருந்த டார்ச் டிரைவரின் கைக்கு வர, அவர் டார்ச் வெளிச்சத்தை ஒவ்வொரு பெண்ணின் மீதும் கொட்டிப் பார்த்துவிட்டு ஒரு பெண்ணின் உடலைச் சுட்டிக்காட்டிக் கொண்டே இன்ஸ்பெக்டர் குணசேகரிடம் சென்றார்.

"அய்யா...! இந்தப் பொண்ணு இந்தக் கார்லயே வரலை."

சென்னை.

அதிகாலை நான்கு மணி. நகரின் மையத்தில் இருந்த அந்தக் கல்யாண மண்டபம் காலை ஒன்பது மணி முகூர்த்தத்திற்கு சோம்பலாய் தயாராகிக் கொண்டிருந்தது. வாத்தியக் கோஷ்டி வேஷ்டிகளையே போர்வையாக்கிக் கொண்டு உறக்கத்தின் பிடியில் சிக்கியிருக்க, கல்யாணத்துக்கு வந்திருந்த மொத்த உறவு ஜனங்களும் கிடைத்த இடங்களில் நித்திராதேவியை தழுவியிருந்தார்கள்.

மாப்பிள்ளை தேவேந்திரன் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் கட்டிலுக்கு சாய்ந்தபடி ஒரு சிகரெட்டை புகையாய் மாற்றிக் கொண்டிருந்தான். சீட்டாடிய களைப்பில் நண்பர்கள் தூங்கிக் கொண்டிருக்க அறைக்குள் ஜீரோ வாட்ஸ் வெளிச்சம் பரவியிருந்தது.

சிகரெட்டின் கடைசி சென்டிமீட்டரை ஆஷ்ட்ரேயில்

இட்டு நசுக்குவதற்காக தேவேந்திரன் திரும்பிய விநாடி –

''லொட்...''

முதுகில் எதுவோ வந்து விழ, சட்டென்று திரும்பி குனிந்து பார்த்தான்.

'ஜன்னல் வழியே யாரோ வீசி விட்டுப் போயிருக்கிறார்கள்...!'

காகித உருண்டையைக் கையில் எடுத்துக் கொண்டவன் வேக வேகமாய் வெளியே போய் எட்டிப் பார்த்தான்.

வெளியே--

யாருமில்லை.

குழப்பத்தை முகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டு கையில் இருந்த காகித உருண்டையைப் பிரித்தான். உள்ளே பால்பாயிண்ட் பேனாவால் எழுதப்பட்ட இரண்டு வரிகள்.

'மிக அவசரம்,

உங்களோடு பேச வேண்டும். கல்யாண மண்டபத்துக்குப் பின்புறம் இருக்கும் மாத்தடிக்கு வரவும்.

மணப்பெண் நிகிலா.'

பதட்டமானான் தேவேந்திரன். கடிதத்தை மறுபடியும் காகித உருண்டையாக்கி சட்டைப் பையில் போட்டுக் கொண்டவன், வேகவேகமாய் நடந்து மண்டபத்தின் பின் பக்கப் பகுதியை நோக்கிப் போனான்.

வேண்டாத பொருள்கள் கொட்டி வைக்கப்பட்டிருந்த பகுதி அது. வேப்ப மரம் ஒன்று கிளைகளைப் பரப்பிக் கொண்டு இருட்டில் அடர்த்தியாய்த் தெரிய, மரத்துக்குப் பின்னால் பட்டுப்புடவை அசைந்தது. காற்றில் மல்லிகை மணத்தது.

பக்கத்தில் போனான் தேவேந்திரன்.

கூப்பிட்டான்.

''நிகிலா.''

மெள்ள பட்டுப்புடவை திரும்பியது.

அது நிகிலா இல்லை,

ஒரு ஆண் முகம். பெரிதாய் மீசை வைத்த முகம். அந்த உருவத்தின் வலது கையில் ஓரடி நீளத்தில் கத்தி ஒன்று


அந்த இருட்டிலும் மி... குணசேகர் மு...

தேவேந்திரனின் க... யிருந்தார்.

கொண்டன.

# 2

தேவேந்திரனின் கால்கள் பூமியோடு ஒட்டிக் கொண்டு மேலே எழும்ப மறுக்க, விழிகள் பயத்தில் உறைந்து போய்க் கத்தியோடு நின்றவனைப் பார்த்தன.



''நீ... நீ... யா... யாரு...?''

''சாகப்போகிற நீ அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன பண்ணப்போற...?''

அடிக்குரலில் பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னவன் சற்றும் எதிர்பாராத ஒரு விநாடியில் தன் கையில் வைத்து இருந்த அந்த ஓரடி நீளக் கத்தியை தேவேந்திரனின் அடி வயிற்றில் சொருகி ஒரு இழு இழுத்தான்.

இரத்தம் பீறிட்டு அடிக்க, தேவேந்திரன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்படியே இரண்டாய் மடங்கி உட்கார்ந்து பின் அப்படியே மல்லாந்தான்.

இரத்தத்தில் நனைந்த கத்தியை, போர்த்தியிருந்த பட்டுச்சேலையில் துடைத்துக் கொண்டு இருட்டில் பின்வாங்கி நடந்து கல்யாண மண்டபத்தின் கடைசி பகுதிக்கு வந்து காம்பௌண்ட் சுவரில் தொற்றி ஏறி மறுபக்கம் குதித்தான்.

கார்ப்பரேஷன் விளக்குகள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தியதன் விளைவு, சாலை இருண்டு போயிருக்க, குப்பைத் தொட்டிக்கு அருகே அந்த கவாஸ... யைக் ஒரு குதிரை மாதிரி தெரிந்தது. ஏறி உட்கார்ந்து கிக்கரை உதைக்க 'உன்னேன்றுயா' என்று சொல்லியபடி என்ஜின் மொத்தமும் 'புக்புக்' என்று சிரித்தது. சேலையை சுருட்டி வீசிவிட்டு...

ஆக்ஸிலேட்டரை முறுக்கினான். ஒரு மின்னல்
ணுக்கு மாதிரி பைக் பாய்ந்தது.

நான்கு நிமிஷத்தில் ஐந்து கிலோ மீட்டர் பயணம்.
ராட்டின் வளைவில் ஒரு டெலிபோன் பூத்தைப்
ார்த்ததும் நின்றது. பைக்கை ஸ்டாண்டிட்டு வைத்து
விட்டு பூத்துக்குள் நுழைந்தான்.

ஒரு ரூபாய் நாணயத்தைத் தயாராக வைத்துக்
ாண்டு ரிஸீவரை எடுத்துக்கொண்டு டயல் செய்தான்.
துமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.
ஹலோ' குரல் கேட்டதும் ஒரு ரூபாய் நாணயத்தை பூத்தின்
ாயில் திணித்து விட்டுக் குரல் கொடுத்தான்.

"யார் பேசறது...?"

"........."

"இன்னிக்கு மே ஒண்ணாம் தேதி, மே தினம். நீ சொன்ன
ாதிரியே மே தினத்தை சிவப்பாக் கொண்டாடிட்டேன்."

"......"

"தேவேந்திரன் இந்த நிமிஷம் கல்யாண மாப்பிள்ளை
டையாது. இன்னும் கொஞ்ச நேரத்துல போலீஸ்
யாதைக்குப் போஸ்ட்மார்ட்டத்துக்குப் போகப்போகிற
ு."

"........."

"சந்தேகமே வேண்டாம். தேவேந்திரன் இறந்து
ட்டான். ஒரு அடி நீளக்கத்தி காரியத்தைக்
ச்சிதமாகவே பண்ணியிருக்கு. சாயந்தர பேப்பர்ல
லாம் விவரமா வரும். படிச்சுக்கோ. ராத்திரி முழுக்கத்
க்கம் இல்லை. நான் போய்த் தூங்கி ரெஸ்ட்
டுக்கணும்... ராத்திரிக்கு வந்து உன்னைப் பார்க்கிறேன்."

ரிஸீவரை கொக்கியில் மாட்டிவிட்டு வெளியே
ருவதற்காக பூத்கதவைத் திறந்தான் அவன்.

இருதயத்துக்குள் தோட்டா பாய்ந்த மாதிரியான
ணர்ச்சி.

வெளியே.

அந்த இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார்.

"அய்யா... இந்தப் பொண்ணு கார்லயே வரலை."



டிரைவர் சொன்னதும் இன்ஸ்பெக்டர் குணசேகர் மு
பூராவும் திகைப்பைப் பூசிக் கொண்டு நிமிர்ந்தார்.

"நீ என்ன சொல்றே...?"

"ஆமாங்கய்யா...! இந்தப் பொண்ணு வேற யாரோ...

குணசேகர் டிரைவரின் கையில் இருந்த டார்ச்ை
வாங்கி அந்தப் பெண்ணின் முகத்தில் வெளிச்சத்
உமிழ்ந்து பார்த்தார்.

முகம் சிதைந்து இரத்தக்களரியாய் தெரிந்த
உடுத்தியிருந்த சேலையில் திட்டுத்திட்டாய் உறை
போன இரத்தம்.

உடல்களை வெளியே எடுத்துப் போட உதவி செ
இரண்டு இளைஞர்களில் ஒருவன் குணசேகரி
சொன்னான்.

"ஸார்... அந்தப் பொண்ணோட உடல் மரக்கிளைய
தொங்கிக்கிட்டிருக்கும் போதே எனக்கு சந்தேகம் ஸ
விபத்துக்குள்ளான எல்லாருமே கார்க்குள்ளே சி
யிருக்கும் போது அந்தப் பொண்ணோட உடல் மட்
எப்படி மரக்கிளையில் மாட்டியிருக்கும்ன்னு யோசிச்சே
நான் சந்தேகப்பட்டது சரியாயிடுச்சு ஸார்...! ஆ
டெண்ட் நடக்கறதுக்கு முந்தியே இந்தப் பொண்ணே
பாடியை யாரோ கொண்டு வந்து இந்த மரத்தே
கிளையில் தொங்கவிட்டுட்டுப் போயிருக்கணும்."

குணசேகர் மறுபடியும் டிரைவரிடம் திரும்
கேட்டார். "உம் பேர் என்ன...?"

"லிங்கய்யா..."

"கார் யாரோடதுன்னு சொன்னே...?"

"அவர் பேர் ராஜேந்திர பாபு. மில் ஓனர். ஆந்திரபார்ட
இருக்கிற சிராலா சொந்த ஊர்..."

"ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போனவங்க யார் யாரு

"அய்யா! இவங்க எல்லாருமே ராஜேந்திர பாபுவே
ஃப்ரண்ட்ஸ்ங்க. மூணு நாளைக்கு முந்தி சிராலாவில்
ஒண்ணைக் கட்றது விஷயமா பேச வந்தாங்க. மூணு ந
இருந்து பேசிட்டு புறப்படும்போது இவங்க வந்த ஹ
வேன் திடீர்ன்னு ரிப்பேராயிடுச்சு. அதனால ராஜேந
பாபு தன்னோட டாட்டா சுமோ கா

கொடுத்தனுப்பினார். நல்ல கண்டிஷனோட இருந்த
வண்டி. இந்த கார்ன்ல திரும்பும் போது அவுட் ஆஃப்
ண்ட்ரோல் ஆயிடுச்சு. வண்டி திசைகெட்டுப் போய்
ண்பது மைல் வேகத்துல புளியமரத்து மேல
ாய்ஞ்சுடுச்சு..."

"விபத்துல சிக்கியிருக்கிற இவங்க ஆறு பேரும்
ஸ்பெண்ட் அண்ட் ஒய்ஃப்பா...?"

"ஆமாங்கய்யா...!"

"இவங்க பேர் அட்ரஸெல்லாம் தெரியுமா?"

"ஒருத்தர் பேர்தான் தெரியும். ராமச்சந்தர். பெசன்ட் நகர்,
லாக்ஷேத்ரா காலனியில் வீடு..."

டிரைவர் லிங்கய்யா சொல்லிக் கொண்டிருக்கும்
ாதே ஒரு ஆம்புலன்ஸ் வேனும், ஒரு ஃபாரன்ஸிக்
ீப்பும் ஹெட் லைட் வெளிச்சங்களோடு வேகமாய் வந்து
ின்றன.

சப்-இன்ஸ்பெக்டர் கார்வண்ணன் நின்ற ஜீப்பினின்று
ுதித்து இன்ஸ்பெக்டர் குணசேகரை நோக்கி வந்தார்.
ல்யூட் ஒன்றைக் கொடுத்து விட்டுச் சொன்னார்.

"ஸார்... ஆம்புலன்ஸ்... ஃபாரன்ஸிக் ரெண்டுக்குமே
ான் பண்ணி கையோடு கூட்டிட்டு வந்துட்டேன்..."

"டாக்டர் வந்திருக்காரா...?"

"டாக்டர் கிரிதர்க்கு போன் பண்ணினேன்.
ுவெய்லபிளா இருந்தார். அவரையும் அழைச்சுட்டு
ந்துட்டேன்..." கார்வண்ணன் சொல்லிக்
கொண்டிருக்கும் போதே, டாக்டர் கிரிதர் மின்னும்
ழுக்கைத் தலையோடும் கையில் மெடிக்கல் கிட்டுமாய்
ந்தார்.

"வாங்க டாக்டர்..."

"ஸ்பாட் டெத் எத்தனை பேர்...?"

"ஆறுபேர். கணவன் மனைவியா மூணு ஜோடி. ஒரு
பெண்ணோட மரணத்துல மட்டும் சந்தேகம்... டிரைவர்
ாக்கிள் எஸ்கேப். கையிலேயும் காலிலேயும் மட்டும்
லேசா அடி. டிரைவரைப் பார்த்து ட்ரீட்மெண்ட்
கொடுத்துட்டு அதுக்கப்புறமா இந்தப் பொண்ணைப்
ாருங்க டாக்டர்."



டாக்டர் கிரிதர் டிரைவர் லிங்கய்யாவின் காயங்களுக்கு
மருந்திட்டு விட்டு மற்ற உடல்களைப் பார்த்து விட்டு
அந்தப் பெண்ணின் உடலுக்குப் பக்கத்தில் வந்து நின்றார்.

குணசேகரின் கையில் இருந்த டார்ச், வெளிச்சத்தைக்
கொட்டியிருக்க - டாக்டர் குத்துக் காலிட்டு உட்கார்ந்து
பெண்ணின் உடலை மெல்லப் புரட்டினார்.

முகமே தெரியாத அளவுக்கு உறைந்து போன இரத்தம்.
கழுத்துப் பகுதியில் ஆழமாய் - கருஞ்சிவப்பாய்
மூன்றங்குல நீளத்திற்கு ஒரு காயம்.

டாக்டர் கிரிதர் குணசேகரிடம் நிமிர்ந்தார். "உங்க
சந்தேகம் சரிதான். இந்தப் பெண் இந்த விபத்தில்
இறந்திருக்க முடியாது. காரணம் இரத்தம் உறைஞ்சு
போயிருக்கிற கண்டிஷன். இந்தப் பெண் உயிரைவிட்டுக்
குறைந்த பட்சம் ஆறுமணி நேரமாவது ஆயிருக்கணும்.
கழுத்தில் இருக்கிற காயத்தைப் பார்க்கிறப்ப இது ஒரு
கொலையாய் இருக்க வாய்ப்பு அதிகம்..."

"முகம் பூராவும் ப்ளட்டாயிருக்கே டாக்டர்?"

"கழுத்துக் காயத்திலிருந்து வழிந்த இரத்தம் முகப்
பூராவும் பரவி உறைஞ்சு போயிருக்கலாம். இப்ப
வாஷ் பண்ணிப் பார்த்துடலாம். கெட் மீ சம் ஃபார்மலின்."

ஒரு ஃபாரன்ஸிக் நபர் பிளாஸ்டிக் ஜக்கில்
ஃபார்மலினும் ஒரு நைலான் பிரஷ்ஷும் கொண்டு வந்து
கொடுக்க டாக்டர் கிரிதர் அதை வாங்கி பிரஷ்ஷால்
பார்மலினைத் தொட்டு அந்தப் பெண்ணின் முகத்தில்
படிந்திருந்த இரத்தத்தைத் துடைக்க ஆரம்பித்தார்.

துடைக்கத் துடைக்கத் திடுக்கிட்டார்.

இரத்தத்தோடு சதையும் சேர்ந்து பிரிப்பிரியாய் வந்தது.
மூக்கு பாதி சிதைந்து போயிருக்க கண்கள் இருக்க
வேண்டிய இடத்தில் இரண்டு குழிகள் தெரிந்தன. பல்
வரிசை கறுப்பாய்த் துருத்திக் கொண்டு தெரிந்தது.

டாக்டர் கர்ச்சீஃபால் முகத்தைப் பொத்திக் கொண்டு
எழுந்தார்.

"ஏதோ ஒரு இரசாயனப் பொருளை உபயோகப்படுத்தி
முகம் அடையாளம் தெரியாதபடிக்கு சிதைச்சிருக்காங்க.
வெரி வெரி க்ரூயல் மர்டர்..."

இன்ஸ்பெக்டர் குணசேகர் கையில் இருந்த டார்ச்சை அந்தப் பெண் உடம்பின் மற்ற பாகங்களில் அடித்துப் பார்த்தார்.

வலது உள்ளங்கைக்கு டார்ச் வெளிச்சம் வந்தபோது நின்றது.

உள்ளங்கையின் மையத்தில் ஏதோ எழுத்துக்கள் பளிச்சிட்டன.

''டாக்டர்...! பாடியோட உள்ளங்கையில் ஏதோ எழுதியிருக்கு... பார்த்திங்களா...?''

டாக்டர் டார்ச் வெளிச்சத்தில் உள்ளங்கையைப் பார்த்தார்.

ஆங்கில எழுத்துக்கள்.

I Love You GG

டாக்டர் அந்த எழுத்துக்களைத் தேய்த்துப் பார்த்து விட்டு குணசேகரை ஏறிட்டார்.

''பச்சை குத்தியிருக்கா. இது ஏதோ காதல் விவகாரம் போலிருக்கு...''

''இந்த GG யார்ன்னு தெரிஞ்சாத்தான் பெண் யார்ன்னுதெரியும்...''

''கார்வண்ணன்...''

''ஸார்...''

''இம்மீடியட்டா போலீஸ் டாக்கை ஸ்பாட்டுக்கு கொண்டு வரச் சொல்லி வயர்லஸ்ல தகவல் கொடுங்க. நேரமாயிட்டா கொலையாளியோட ஸ்மெல் டிஸ்டர்ப் ஆயிடும்...''

கார்வண்ணன் ஜீப்புக்கு ஓடினார்.

சரியாய் முப்பது நிமிஷம். டாக் ட்ரெய்னர் மோசஸ் கன்னுக்குட்டி சைஸில் இருந்த கறுப்பு நாயோடு வந்து சேர்ந்தார்.

''ஷீபா ஸ்மெல் இட்...''

ஷீபா கட்டளையை வாங்கிக் கொண்டு அந்தப் பெண்ணின் உடலை, தலையிலிருந்து கால் வரைக்கும் அங்குலம் அங்குலமாய் முகர்ந்துவிட்டு, ரோட்டின் இடது பக்கமாய் ஓட ஆரம்பித்தது.

டாக் ட்ரெய்னர் மோசஸ் தொடர்ந்து ஓடினார்.



அவர்களுக்குப் பின்னால் போலீஸ் ஜீப்பில் குணசேகரும் கார்வண்ணனும் தொடர்ந்தார்கள்.

நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடிய ஷீபா அதற்குப் பின் வலதுபக்கமாய்ப் பிரிந்த மண்பாதைக்குள் நுழைந்தது.

பாதையின் முகப்பில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பழைய சிமெண்ட் பெயர்ப் பலகையைப் பார்த்ததும் குணசேகரும், கார்வண்ணனும் திடுக்கிட்டுப் போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

ஷீபா உள்ளே ஓடிக்கொண்டிருந்தது.

# 3



இன்ஸ்பெக்டர் குணசேகரும் சப்-இன்ஸ்பெக்டர் கார்வண்ணனும் ஜீப்பை விட்டு இறங்கி அந்தப் பழைய சிமெண்ட் பெயர்ப் பலகைக்கு முன்பாய் போய் நின்றார்கள். அதில் கோணல் மாணலாய் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் கல்லறைத் தோட்டம் என்று சொன்னது.

குணசேகர் பெருமூச்சொன்றை விட்டபடியே தோள்களைக் குலுக்கினார். ''கார்வண்ணன்...! நாய் ஷீபா இந்த மயானத்துக்குள்ளே போயிருக்கு. இங்கே பிரச்னைக்கு விடை கிடைக்குமா... இல்ல பிரச்னை பெரிசாகுமான்னு தெரியலை. சாதாரண ஆக்ஸிடெண்ட் கேஸ்தானேன்னு ஸ்பாட்டுக்கு வந்தா கேஸ் ட்ரில் வாங்குது...''

மயானத்துக்குள் ஷீபாவின் குரைப்புச் சத்தம் கேட்டது.

இருவரும் உள்ளே போனார்கள். டாக் ட்ரெய்னர் மோசஸ் ஷீபாவுக்கு பின்னால் ஓடிக் கொண்டிருந்தார். ஷீபா சிதிலமான கல்லறைகளைத் தாண்டி யாரையோ பார்க்கப் போகிற அவசரத்தோடு ஓடியது. கார்வண்ணனும் குணசேகரும் தொடர்ந்தார்கள்.

கல்லறைத் தோட்டம் அவ்வளவு சுத்தமாக இல்லை. பார்த்தீனியமும், சப்பாத்திக் கள்ளியும் பார்ட்னர்ஷிப் போட்டுக் கொண்டு மயானத்தை ஆக்ரமித்திருந்தன. கால்நடைகளின் கழிவுகள் ஆங்காங்கே காய்ந்து தெரிந்தது.

வேகமாய் ஓடிக்கொண்டிருந்த ஷீபா இப்போது வேகத்தைக் குறைத்துக்கொண்டு மெதுவாய் நடைபோட்டு மண்ணை முகர்ந்தது.

டாக் ட்ரெய்னர் மோசஸ் ஷீபாவுக்கு சின்னச் சின்ன கட்டளைகளாகக் கொடுத்துக்கொண்டு அடியொற்றி நடை போட்டார்.

ஷீபா யோசித்து யோசித்து நடந்து பின் அந்தச் சப்பாத்தி கள்ளி புதர்க்கு பக்கமாய் வந்து நின்று மண்ணை முன்னங்காலால் பிறாண்டிக் காட்டி விட்டு படுத்துக் கொண்டது.

மோசஸ் மணலை கிளறிப் பார்த்துவிட்டு குணசேகரிடம் நிமிர்ந்தார்.

"ஸார்... இங்கே மணல் இளகியிருக்கு. இந்த இடத்துல குழி தோண்டப் பட்டிருக்கலாம்ன்னு நினைக்கிறேன்."

குணசேகர் தன் கனமான பூட்ஸ் காலால் மண்ணை மிதித்துப் பார்த்தார். மண் கீழே இறங்கியது.

"கார்வண்ணன்..."

"ஸார்..."

"இந்த இடத்தை தோண்டிப் பார்க்கணும். நீங்க ஜீப்பை எடுத்துக்கிட்டுப் போய் ஆட்களையும் ஸ்பாட் போஸ்ட் மார்ட்டம் பண்ண ஒரு டாக்டரையும் கூட்டிட்டு வந்துடுங்க."

"எஸ்... ஸார்..." கார்வண்ணன் அந்த இடத்தை விட்டு வேகமாய் நடந்து போக, குணசேகர் தன் பார்வையைத் துரத்திச் சுற்றும் முற்றும் பார்த்தார். தொலைவில் ஒரு குடிசை தெரிந்தது.

"மிஸ்டர் மோசஸ்! நீங்க இங்கேயே இருங்க. கார்வண்ணன் ஆட்களைக் கூட்டிட்டு வர்றதுக்குள்ளே அந்தக் குடிசையில் யார் இருக்காங்கன்னு பார்த்து ஒரு விசாரணை பண்ணிட்டு வந்துடறேன்."



மோசஸ் தலையாட்ட குணசேகர் சிதிலமான கல்லறைகளுக்கு மத்தியில் முளைத்திருந்த பார்த்தீனிய செடிகளை மிதித்துக் கொண்டு தொலைவில் தெரிந்த குடிசையை நோக்கிப் போனார்.

பத்து நிமிஷ நடைக்குப் பின் அந்தக் குடிசையை சமீபித்தார். வாசலில் இரண்டு ஆடுகள் கட்டிப்போடப் பட்டிருக்க குடிசையின் கதவு சாத்தப்பட்டிருந்தது.

குணசேகர் கதவின் மேல் கையை வைத்து தள்ளிப் பார்த்தார். உட்பக்கமாய் தாழிடப்பட்டிருந்தது.

மெல்ல தட்டினார்.

"டொக்... டொக்..."

குணசேகர் காத்திருக்க அரை நிமிஷ அவகாசத்துக்குப் பிறகு கதவு மெல்ல பின் வாங்கி உள்ளே போயிற்று.

ஒரு இளம்பெண் பார்வைக்குக் கிடைத்தாள். இடுப்பில் சிணுங்கும் கைக்குழந்தை. குணசேகரின் யூனிஃபார்மை பார்த்ததும் தன் பெரிய கண்களில் மிரட்சியைக் காட்டினாள். பயமாய் எச்சில் விழுங்கிக் கொண்டு கேட்டாள்.

"யார் வேணுங்க...?"

"உம் பேர் என்ன...?"

"வடிவு...ங்க..."

"வீட்ல உம் புருஷன் இருக்கானா...?"

"அ... அவரு... கோழி கூவறப்பவே எந்திரிச்சி வேலைக்கு போயிட்டாருங்க..."

"உம் புருஷனுக்கு என்ன வேலை...?"

"வயக்காட்டு வேலைதாங்க... அவர்க்கு தப்பு தண்டா வேலை எதுவும் தெரியாதுங்க..."

"இதோ பார்... நான் கேக்கிற கேள்விக்கு ஒழுங்கான பதிலைச் சொல்லணும்... இந்த கல்லறைத் தோட்டமயானம் இப்ப யார் பொறுப்புல இருக்கு...?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. ரெண்டு வருஷத்துக்கு முந்தி வரைக்கும் 'மரியதேசஸ்'ன்னு வயசான பெரியவர் ஒருத்தர் அந்தக் கல்லறையை பராமரிப்பு பண்ணிட்டிருந்தார். அவர் செத்துப் போயிட்டதுக்கப்புறம் வேற யாரும் இங்கே வரலை.

செத்தவங்களை அடக்கம் பண்ணக்கூட இப்ப இங்கே யாரும் வர்றதில்லை. மொதல்ல பார்க் மாதிரி இருந்த கல்லறைத் தோட்டம் இப்போ பாழ்பட்டு போச்சு.''

''நேத்து ராத்திரி அந்த மயானத்துக்குள்ளே யாராவது இருந்ததை நீயோ உன் புருஷனோ பார்த்தீங்களா?''

''இல்லீங்க... நாங்க யாரையும் பார்க்கலை. ஏழுமணிக்கு கதவைச் சாத்திட்டா அதுக்கப்புறம் நாங்க விடிஞ்ச பின்னாடிதான் கதவைத் தொறந்துகிட்டு வெளியே வருவோம்...''

''பக்கத்துல வீடுங்க ஏதாவது இருக்கா?''

''இல்லீங்க... வீடுகளை பார்க்கணும்னா ரெண்டு கல்லு தொலைவு போகணுங்க...''

''உம் புருஷன் வேலையிலிருந்து எப்ப திரும்பி வருவான்...?''

''பொழுது சாயும்போது வந்துடுவாருங்க...'' பயத்தோடு சொன்னவளை குணசேகர் மேலும் சில நிமிஷங்கள் விசாரணை நடத்திவிட்டு மோசஸ் இருந்த இடத்துக்கு திரும்ப வந்தபோது சப்-இன்ஸ்பெக்டர் கார்வண்ணன் இரண்டு ஆட்களோடும் டாக்டர் ஒருவரோடும் வந்து காத்துக் கொண்டிருந்தார்.

கேட்டார்.

''ஸார்! தோண்டிடலாமா...?''

''ம்... ஆரம்பிங்க...'' குணசேகர் தலையசைத்ததும் ஆட்கள் மண்வெட்டிகளோடும் கடப்பாறையோடும் களத்தில் இறங்கினார்கள். மண் வேகவேகமாய் தோண்டப்பட்டு ஓர் ஓரமாய் குவிக்கப்பட குழி வாயை திறக்க ஆரம்பித்தது.

குழியின் ஆழம் மூன்றடியைத் தொட்டபோது மண்ணோடு சேர்ந்து பிசையப்பட்ட வேஷ்டியும் சட்டையும் இரத்தக்கறையோடு வெளிப்பட, அதை எடுத்து மேலே போட்டுவிட்டு மறுபடியும் இரண்டடி ஆழம் தோண்டியபோது உடலின் முதுகுபாகம் பார்வைக்குக் கிடைத்தது.

மண்ணை பரபரவென்று விலக்கிவிட்டு உடலை இழுத்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாய் உடல் மேலே



வந்தது.

கெடாத திடகாத்திரமான உடல். இளைஞனின் நெற்றியில் விழுந்திருந்த கத்திக் குத்துக் காயம் ஒரு ஆழமான குழி மாதிரி தெரிந்தது.

''யாரிவன்...?''

குணசேகர் குனிந்து இளைஞனின் உடலை மும்முரமாய் பார்த்துக் கொண்டிருக்க குழி வெட்டிய இரண்டு பேரில் ஒருவன் கூப்பிட்டான்.

''அய்யா...''

திரும்பினார்.

''என்ன...?''

''இதுவும் குழிக்குள்ளே இருந்ததுங்கய்யா...'' அவன் நீட்டியதை வாங்கிப் பார்த்தார்.

அது ஒரு சிறிய பாக்கெட் டைரி. ஒட்டியிருந்த மண்ணைத் துடைத்து விட்டு முதல் பக்கத்தைப் புரட்டினார்.

முகம் வியப்புக்குப் போக பார்வை ஆணியடித்தமாதிரி அந்தப் பக்கத்திலேயே நிலைத்தது.

டெலிபோன் பூத்திலிருந்து வெளிப்பட்ட அவன் வெளியே இன்ஸ்பெக்டர் ஒருவர் நின்றிருப்பதைப் பார்த்ததும் ஒரு விநாடி முகம் இருண்டு மறுவிநாடியே இயல்புக்கு வந்தான்.

இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''டெலிபோன் ஒர்க் பண்ணுதா?''

''பண்ணுது ஸார்...''

''நேத்து பூராவும் இந்த போன் அவுட் ஆஃப் ஆர்டர். இன்னிக்கு சரி பண்ணிட்டாங்க போலிருக்கு...''

இன்ஸ்பெக்டர் சொன்னதைக் கேட்டு புன்னகையோடு தலையசைத்துக் கொண்டே நடக்க முயன்றவனை இன்ஸ்பெக்டரின் குரல் மறுபடியும் ஒலித்து அவனை நிறுத்தியது.

''ஒரு நிமிஷம் மிஸ்டர்...''

அவன் நின்றான். இன்ஸ்பெக்டர் எறிட்டார்.

''இதுக்கு முன்னாடி உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி

இருக்கே. உங்க நேட்டிவ் ப்ளேஸ் எது...?''

''இதே சென்னைதான்...''

''உங்க பேரு...?''

உண்மையான பெயரை மறைத்து விட்டு ''சிவராம கிருஷ்ணன்'' என்றான்.

''வேலைக்கு போறீங்களா... இல்ல பிசினஸா?''

''பிசினஸ்...!''

''என்ன பிசினஸ்...?''

அவன் எரிச்சலாய் பார்த்தான். ''என்ன ஸார் இது! ஏதோ ஒரு குற்றவாளியை விசாரிக்கிற மாதிரி விசாரணை பண்ணிட்டிருக்கீங்க...?''

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். ''நீங்க குற்றவாளியா இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான்.''

''என்ன ஸார் விளையாடறீங்களா...? நான் ஒரு டீஸண்ட்டான ஃபேமிலியைச் சேர்ந்தவன்.''

''அப்படியிருந்தா சந்தோஷந்தான்! அது சரி நீங்க இப்ப யார்க்கு போன் பண்ணீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா...?''

''அது என்னோட பர்சனல் மேட்டர். நான் யார்க்கு போன் பண்ணினேன்ங்கிறதை உங்ககிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''ஸாரி மிஸ்டர்... உங்க மாதிரியான இளைஞர்கள் சிலர் டெலிபோன் பூத்திலிருந்து போன் பண்ணி வெடிகுண்டு புரளிகளைக் கிளப்பி விடறாங்க. அவங்களை பிடிக்கிறதுக்காகத்தான் இப்படி ஒரு அதிரடி போலீஸ் நடவடிக்கை. சிட்டியில் இருக்கிற எல்லா டெலிபோன் பூத்களையும் கடந்த இரண்டு நாளா இப்படித்தான் வாட்ச் பண்ணிட்டிருக்கோம். நீங்க இப்போ எந்த நெம்பருக்கு போன் பண்ணி பேசினீங்களோ அந்த நெம்பரை நோட் பண்ணிக்குடுங்க. அந்த நெம்பருக்குரிய நபர் யாரு, அட்ரஸ் என்னங்கறதையும் சொல்லுங்க. நான் வெரிஃபை பண்ணிக்கிட்டு உங்களை அனுப்பிடறேன்...''

அவனுக்கு நெற்றி வியர்த்து பிசுபிசுத்தது. வாய் ஈரம் காய்ந்து உலர்ந்து போயிருந்தது.

இன்ஸ்பெக்டரின் புன்னகை பெரிதாயிற்று.

''தப்பு பண்ணினவங்களுக்குத்தான் இப்படி வேர்க்கும்.



உங்க டெலிபோன் நம்பர் தர்றீங்களா...?''

அவன் இன்ஸ்பெக்டர்க்கு பதில் சொல்லாமல் சுற்றும் முற்றும் பார்த்தான்.

அந்தக் காலை நேரத்தில் சாலையில் ஜனநடமாட்டம் அறவே காணாமல் போயிருக்க அவன் தன் இடுப்புக்கு கையைக் கொண்டு போய் அங்கே ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்தான்.

## 4



அவன் கையில் கத்தி முளைத்து தன் மார்பை நோக்கி அது உயர்த்தப்பட்டதும் இன்ஸ்பெக்டர் அந்த ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் உஷார் நிலைக்கு வந்து கத்தியைப் பிடித்திருந்த அவனுடைய கையின் மணிக் கட்டை 'ச்ரப்'என்று உடும்பாய் பற்றிக் கொண்டார்.

''உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருப்பேன். உன் கையால கத்திக் குத்தை வாங்கி செத்துப் போறதுக்காகவா காக்கி யூனிஃபார்ம் போட்டுக்கிட்டு வந்திருக்கேன்...? கத்தியைக் கீழே போட்றா...''

இன்ஸ்பெக்டர் அவனுடைய மணிக்கட்டை முறுக்க - ஒரு நிமிஷ போராட்டத்திற்குப் பின் கத்தி உதிர்ந்தது. பிளாட்பாரக்கல்லில் பட்டு தெறித்து பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த ஏரிக்குள் விழுந்தது.

இரண்டு பேர்க்கும் இப்போது கைகலப்பு ஆரம்பமாக அவன் வேகமாய் இயங்கினான். வலது கை முஷ்டி இன்ஸ்பெக்டரின் அடிவயிற்றில் ஒரு இடியாய் இறங்க அவர் வலியை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் சுருண்டு விழுந்தார். விழுந்தவரின் முகத்தில் அவனுடைய பூட்ஸ் கால் ஆக்ரோஷமாய்ப் பதிந்து நசுக்க இன்ஸ்பெக்டரின் கடைவாயிலும் ரத்தம் உடனே தெரிந்து கோடுகளாய் வழிந்தது.

தூரத்தில் யாரோ இரண்டு பேர் ஓடி வர அவன் இன்ஸ்பெக்டரை காலால் உதைத்து உருட்டிவிட்டு தன் பைக்கை நோக்கி ஓடிப்போய் மேலே பரவி, கிக்கரை மிதிக்க பைக் உயிர் பிடித்துக் கொண்டு சைலன்ஸரில் புகை தள்ளியது. ஆக்ஸிலேட்டரை வேகமாய் முறுக்க துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட தோட்டாவாய் மாறியது பைக்.

கண்ணிமைக்கிற நேரம்கூட இல்லை. பைக் அந்த வளைவில் திரும்பி மறைந்து விட, ஓடி வந்த அந்த இரண்டு பேரும் இன்ஸ்பெக்டர்க்கு பக்கத்தில் குனிந்தார்கள். எழுப்பி உட்கார வைத்தார்கள். இரண்டு பேரும் காலை நேர ஜாக்கிங் சூட்டில் இருந்தார்கள்.

"யார்... ஸார் அவன்...?"

இன்ஸ்பெக்டர் ரத்தம் வழியும் வாயோடு மூச்சிரைத்துக் கொண்டே சொன்னார்.

"அவன் யார்ன்னு தெரியலை. ஆனா தப்பான ஆள். ஒரு கல்யாண மண்டபத்துக்குள்ளேயிருந்து பின்பக்க காம்பௌண்ட் சுவர் ஏறி ரோட்டுப் பக்கத்துல குதிச்சவனை நான் தூரத்திலிருந்து பார்த்து ஃபாலோ பண்ணிட்டு வந்தேன். இந்த பூத்துக்குள்ளே யார்க்கோ போன் பண்ணிட்டிருந்தான். போன் பண்ணிட்டு வெளியே வந்தவனை மடக்கி விசாரணை பண்ணிக்கிட்டிருக்கும் போது குத்துறதுக்காக கத்தியை எடுத்துக்கிட்டான். அவனை ஹேண்டில் பண்ணி பிடிக்கறதுக்குள்ளே என்னை தாக்கிட்டு ஓடிட்டான்." இன்ஸ்பெக்டர் பேசிக்கொண்டே எழ முயன்றார்.

முடியவில்லை.

அடி வயிற்றில் வலி தெறித்து நரம்புகள் சுருண்டன. அப்படியே சாய்ந்து கொண்டவர் அந்த இரண்டு பேர்களையும் ஏறிட்டார்.

"ப்ளீஸ்... எனக்காக ஒரு உதவி செய்ய முடியுமா?"

"சொல்லுங்க... ஸார்..."

"அவசரப் போலீஸ்க்கு உடனே போன் பண்ணி விஷயத்தை தெரியப்படுத்துங்க. என்னோட பேர் கிஷோர். க்ரைம் ப்ராஞ்ச்ல இன்ஸ்பெக்டரா இருக்கேன். அதையும்



மென்ஷன் பண்ணுங்க. அப்பத்தான் ரெஸ்பான்ஸ் இருக்கும். தகவல் கண்ட்ரோல் ரூமுக்கு போயிடுச்சுன்னா அவங்க பைக்கை எப்படியும் சேஸ் பண்ணி பிடிச்சுடுவாங்க. பைக் நெம்பர் நோட் பண்ணிக்குங்க. டி.என்.டி டபுள் ஃபைவ் டபுள் நைன்."

ஜாக்கிங் சூட் அணிந்த இரண்டு பேர்களில் ஒருவர் டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து அவசரப் போலீஸைத் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்ல, அடுத்த சில நிமிடங்களில் போலீஸ் ஜீப் ஒன்று தன் மண்டையில் சுழலும் சிவப்பு விளக்கோடு புழுதி மண்ணும் புகையும் பறக்க பூத்துக்கு முன்பாய் வந்து நின்றது. ஒரு இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கி டெலிபோன் பூத்துக்குள் சாய்ந்து தளர்வாய் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் கிஷோருக்குப் பக்கத்தில் வந்தார்கள். கைத்தாங்கலாய் அவரைப் பிடித்து தூக்கி நிறுத்தி ஜீப்பை நோக்கி கூட்டிப் போனார்கள். ஜாக்கிங் போனவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு ஜீப் புறப்பட்டது - ஹாஸ்பிட்டலை நோக்கி.

அந்த இன்ஸ்பெக்டர் சொன்னார். "மிஸ்டர் கிஷோர்... அ'யம் பரந்தகன். பி.சிக்ஸ் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர். சுமங்களா கல்யாண மண்டபத்தில் கொஞ்ச நேரத்துக்கு முந்தி கல்யாண மாப்பிள்ளை தேவேந்திரன் கொலை செய்யப்பட்டு கிடக்கிறதா தகவல் வந்தது. சப்-இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் புறப்பட்டுப் போயிருக்காங்க. நான் ஸ்டேஷன்ல வேற ஒரு கேஸை டீல் பண்ணிட்டிருக்கும் போதுதான் கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்கு தகவல் வந்தது. ஸோ... நீங்க கொலையாளியைப் பார்த்திருக்கீங்க...?"

கிஷோர் பலஹீனமாய் தலையாட்டினார்.

"எஸ்..."

"ஆள் எப்படியிருந்தான்...?"

"இளைஞன். வயசு முப்பதுக்குள்ள. நல்ல உயரம். மாநிறம். கொஞ்சம் புடைத்த மாதிரியான நாசிக்குக் கீழே பெரிய மீசை. டபுள் சின். பான் கறை பல்வரிசை. இளநீல நிறத்தில் ஜீன்ஸ் பேண்ட்டும் சட்டும் உடுத்தி பார்க்க ஒரு

காலேஜ்ஸ்டூடண்ட் மாதிரி இருந்தான்.''

''என்ன பைக்...?''

''கவாஸகி. ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் டி.என்.டி டபுள் ஃபைவ் டபுள் நைன்.''

''எப்படியும் மாட்டுவான்...! போலீஸ் சிட்டி பூராவும் அலர்ட்டாகி அங்கங்கே வலை விரிச்சு வெச்சாச்சு. ஒரு அரைமணி நேரத்துக்குள்ளே போலீஸ் லாக்கப்புக்குள்ளே அவன் முட்டி போட்டு உட்கார்ந்திருப்பான்!''

ஹாஸ்பிட்டல் வந்தது.

''மிஸ்டர் கிஷோர்...! உங்களை ஹாஸ்பிட்டலைஸ் பண்ணிட்டு நான் சுபமங்களா கல்யாண மண்டபத்துக்குப் போய் கல்யாண மாப்பிள்ளை தேவேந்திரன் கொலை சம்பந்தமான என்கொயரியை ஆரம்பிக்கணும்.''

கிஷோர் பெருமூச்சுவிட்டார். ''எனக்கு இப்ப இருக்கிற கவலையெல்லாம் கைக்கு கிடைச்ச கொலையாளியை தப்பிக்கவிட்டுட்டோமேங்கிறதுதான்...''

''அவனை நீங்க தனியா ஹேண்டில் பண்ணியிருக்கக் கூடாது மிஸ்டர் கிஷோர்.''

''சுலபமா மடக்கிடலாம்னு நினைச்சு தப்புக் கணக்கு போட்டுட்டேன். கொலையாளிக்கு ஃபைட்சென்ஸ் அதிகம். நான் எதிர்பார்க்காத ஒரு விநாடியில் என்னை வீழ்த்திவிட்டான்.''

ஹாஸ்பிட்டலுக்குள் நுழைந்தார்கள். டாக்டர் ஜெயராமனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி இன்ஸ்பெக்டர் கிஷோரை ட்ரீட்மெண்டுக்காக ஒப்படைத்துவிட்டு பராந்தகன் வெளியே வந்தபோது அந்தப் பெண் பத்திரிகை நிருபர் எதிர்ப்பட்டாள்.

''குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்.''

''ஓ...! நிவேதிதாவா...! அதுக்குள்ளே நியூஸை மோப்பம் பிடிச்சுகிட்டு வந்துட்டியா...?''

''எந்த நியூஸ் ஸார்...?''

இன்ஸ்பெக்டர் பராந்தகன் நடந்துகொண்டே பேசினார். ''என்ன தெரியாத மாதிரி கேட்கிறே...? சுபமங்களா கல்யாண மண்டபத்தில பொண்ணு கழுத்துல தாலிகட்ட இருந்த மாப்பிள்ளை மர்டர். கொலையாளியை



ஃபாலோ பண்ணிட்டு வந்த இன்ஸ்பெக்டர் கிஷோரும் தாக்கப்பட்டு இப்போ ஹாஸ்பிட்டல்ல அட்மிட் செய்யப்பட்டிருக்கார்.''

நிருபர் நிவேதிதா இன்ஸ்பெக்டர் பராந்தகனைத் தொடர்ந்து வந்தாள்.

''ஸார்... காலங்கார்த்தால இது ஹாட் நியூஸ்தான். ஆனா இதைவிட ஹாட் நியூஸ் ஒண்ணு என் கைவசம் இருக்கு. இதை உங்ககிட்ட சொல்றதுக்காகத்தான் வந்தேன்.''

பராந்தகன் நின்றார்.

''இதைவிட ஹாட் நியூஸா?''

''ஆமா... ஸார்.''

''என்ன...? சொல்லு...''

''ஸார்... இது ஒரு அண்டர்க்ரௌண்ட் நியூஸ். வெளியே இதுவரைக்கும் தெரியாத நியூஸ்.''

''சஸ்பென்ஸ் வைக்காம சொல்லு...''

நிவேதிதா குரலைத் தாழ்த்திக் கொண்டாள். ''ஸார், ரெண்டு நாளைக்கு முந்தி அதாவது ஏப்ரல் இருபத்தெட்டாம் தேதி கனகு என்கிற ஒரு ஆயுள் தண்டனைக் கைதியை உடல்நலம் சரியில்லைன்னு ஜி.ஹெச்ல அட்மிட் பண்ணினாங்க. அந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியாது...! அது ஜெயில் செக்‌ஷன். என்னோட நாலெட்ஜுக்கு வர வாய்ப்பே இல்லை. சரி... அந்தக் கைதிக்கு இப்போ என்ன...?''

நிவேதிதா குரலை இன்னமும் தாழ்த்திக் கொண்டாள்.

''அந்தக் கைதி கனகு இப்போ ஹாஸ்பிட்டலில் இல்லை ஸார்...''

''இல்லைன்னா என்ன அர்த்தம்...? உடம்பு குணமாகி மறுபடியும் ஜெயிலுக்கு போய்ட்டானா...?''

''இல்ல ஸார். ஹாஸ்பிட்டல்ல அட்மிட்டான அன்னிக்கு ராத்திரி எப்படியோ காவலுக்கு இருந்த செக்யூரிட்டிகளை ஏமாத்திட்டு தப்பிச்சு போய்ட்டான்.''

பராந்தகன் திடுக்கிட்டார். ''அப்படி ஒரு கைதி தப்பிச்சு போயிருந்தா எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் நியூஸ் வந்திருக்குமே...''

''நியூஸ் எப்படி ஸார் வெளியே வரும்...? அதுல சம்பந்தப்பட்டவங்க எல்லாருமே கமுக்கமாக இருந்து விஷயம் வெளியே போகாமே திரை மறைவுல அந்தக் கைதியை தேடிக்கிட்டு இருக்காங்க. இதுக்கு டாக்டர்களும் உடந்தை.''

''இது நிஜமா...?''

''நிஜமோ நிஜம் ஸார்...''

''உனக்கு எப்படித் தெரியும்...?''

''என் ஃப்ரண்ட் ஒருத்தி ஜி. ஹெச்ல வேலை பார்க்கிறா. லேப் டெக்னீஷியன். அவ மூலமா எனக்கு நியூஸ் வந்தது. அது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்கத்தான் உங்களைப் பார்க்க ஸ்டேஷனுக்குப் போனேன். நீங்க இந்த ஹாஸ்பிட்டல்ல இருப்பீங்கன்னு ஸ்டேஷன் ரைட்டர் சொன்னார். ஏன் ஸார் ஒரு ஆயுள் கைதியை, தப்பிவிட்டுட்டு போலீஸார் இவ்வளவு கமுக்கமா இருக்கிறது சரியா...?''

இன்ஸ்பெக்டர் குணசேகர் அந்த பாக்கெட் டைரியின் முதல் பக்கத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க, சப் இன்ஸ்பெக்டர் கார்வண்ணன் முகம் முழுவதும் குழப்பத்தை ஒட்ட வைத்துக் கொண்டு மெதுவாய் பக்கத்தில் வந்து நின்றார்.

''என்ன ஸார்...?''

''இந்த டைரியோட முதல் பக்கத்தைப் பாருங்க.''

கார்வண்ணன் வாங்கிப் பார்த்தார். குத்தீட்டி ஒன்று இருதயத்துக்குள் செருகிக்கொண்டு நிற்பதைப் போன்ற ஒரு ஸ்டிக்கர், டைரியின் முதல் பக்கம் பூராவும் அடைத்துக் கொண்டு தெரிந்தது.

''இது ஏதோ தீவிரவாத இயக்கம்னு நினைக்கிறேன் ஸார்.'' கார்வண்ணன் டைரியின் மற்ற பக்கங்களைப் புரட்ட சங்கேத மொழியில் ஏதேதோ வார்த்தைகள்.

பறக்கும் யானை, ப்ரிக் ஸில்க், கோட்சே, பொதுக் கூட்டம், வாக்கிங், பிரசாதம்.

''ஏதாவது புரியுதா கார்வண்ணன்?''

''ஒண்ணும் புரியலை ஸார்...''



''டெலிபோன் நம்பர் ஏதாவது இருக்கா பாருங்க...''

கார்வண்ணன் பக்கங்களைப் புரட்டினார். பத்துப் பதினைந்து பக்கங்கள் காலியாக இருக்க அதற்குப்பின் வந்த ஒரு பக்கத்தில் டெலிபோன் படம் வரைந்து அதற்கு அருகில் பால்பாயிண்ட் பேனாவால் 0000000 என ஏழு சைபர்கள் எழுதப்பட்டிருந்தது.

''ஸார்... இதைப் பாருங்க...''

குணசேகர் வாங்கிப் பார்த்தார். இரு புருவங்களுக்கு மத்தியில் ஒரு முடிச்சு விழுந்தது.

''இப்படி ஒரு போன் நம்பரா...? இருக்காதே!''

அந்த ஏழு சைபர்களையும் உற்றுப் பார்த்தார்.

ஒரு நிமிஷம்...

இரண்டு நிமிஷம்... மூன்று நிமிஷம்... நான்காவது நிமிஷம்.

ஏதோ புரிகிற மாதிரி இருந்தது.

# 5



இன்ஸ்பெக்டர் குணசேகர் சப்-இன்ஸ்பெக்டர் கார்வண்ணனிடம் அந்த ஏழு சைபர்களையும் காட்டிக் கேட்டார்.

''கார்வண்ணன்...! இந்த சைபர்களை மறுபடியும் பாருங்க. உங்களுக்கு ஏதாவது வித்தியாசமா தெரியுதா?''

அவர் வாங்கிப் பார்த்து விட்டு தலையாட்டினார். ''ஒண்ணும் தெரியலையே ஸார்... ஏழு சைபர்கள் மட்டும் தான் தெரியுது.''

''பார்வையை இன்னும் கொஞ்சம் துல்லியமாக்கிப் பாருங்க...''

பார்த்தார். அவர் முகம் ஒரு மாறுதலுக்கு உட்பட்டபின் குணசேகரிடம் நிமிர்ந்தது.

''ஆமா ஸார். சைபர்களுக்குக் கீழே ஏதோ புள்ளிகள் தெரியுது.''

"யூ ஆர் கரெக்ட். அந்தப் புள்ளிகளில்தான் விஷயமே இருக்கு. நம்பர் யாருக்கும் தெரியக்கூடாதேங்கிறதுக்காக இந்த ரகசியப் புள்ளிகள்..."

"இந்தப் புள்ளிகளை வெச்சுக்கிட்டு நாம எப்படி ஸார் டெலிபோன் நம்பரைக் கண்டுபிடிக்கப் போறோம்...? கடல்ல ஊசியைப் போட்டுட்டு தேடி எடுக்கிற மாதிரிதான் ஸார் இது."

"இல்ல கார்வண்ணன்! கொஞ்சம் முயற்சி பண்ணினா கண்டுபிடிச்சுடலாம். இதில் இருக்கிற முதல் ப்ளஸ் பாயிண்ட் என்ன தெரியுமா? இது ஏழு இலக்கங்களைக் கொண்ட போன் நம்பர். சென்னை, பெங்களூர் போன்ற பெரிய நகரங்களுக்குத்தான் இந்த ஏழு இலக்க டெலிபோன் எண் இருக்கும். ஸோ, சர்ச்சிங் பவுண்டரி ஒரு லிமிட்டுக்குள்ளதான் இருக்கும்..."

கார்வண்ணன் தன் சட்டை பாக்கெட்டிலிருந்து ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு அந்த ஏழு சைபர்களையும் டைரியில் இருந்த மாதிரியே போட்டார். பிறகு முதல் சைபர்க்கு மேலே ஒரு புள்ளி - இரண்டாவது மூன்றாவது சைபர்களுக்குக் கீழே இரண்டு புள்ளி - நான்காவது சைபர்க்கு மேல் ஒரு புள்ளி - ஐந்தாவது சைபர்க்கு கீழே ஒரு புள்ளி— ஆறாவது ஏழாவது சைபர்களுக்கு மேலே இரண்டு புள்ளிகளும் வைத்தார்.

பார்த்தார்.

"ஒண்ணும் புரியலை ஸார்."

"நமக்கு வேணும்ன்னா இது புரியாமே இருக்கலாம். பட், ஃபாரன்ஸிக் டிப்பார்ட்மெண்டில் கோட்வேர்ட் செக்ஷன்ல இருக்கிற ஏ.ஃப்.ஓ. ரிச்சர்ட்டுக்குத் தெரியாமே இருக்காது. கார்வண்ணன் நீங்க ஒரு காரியம் செய்யுங்க..."

"சொல்லுங்க ஸார்..."

"நீங்க இங்கே ஸ்பாட்ல இருந்து எல்லா போலீஸ் சம்பிரதாயங்களையும் முடிச்சுக்கிட்டு ஜி.ஹெச்.க்கு வந்துடுங்க. பின்னாடி இருக்கிற டெலிபோன் நம்பரை ட்ரேஸ் பண்ணிக் கொண்டு வந்துடறேன்."

"எஸ்... ஸார்..."



இன்ஸ்பெக்டர் குணசேகர் அந்த பாக்கெட் டைரியை சர்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டு ஜீப்பை நோக்கிப் போனார்.

நாற்பது நிமிஷப் பயணம்.

நகரின் மையத்தில் இருந்த ஃபாரன்ஸிக் வந்தது. அந்தக் காலை வேளையிலேயே ரிச்சர்ட் தன்னுடைய செக்ஷனில் பிஸியாக இருந்தார். கம்ப்யூட்டர்க்கு ஒரு ஃப்ளாப்பியை சாப்பிடக் கொடுத்து மானிட்டர் திரையில் எதையோ சரி பார்த்துக் கொண்டிருந்தார். குணசேகரைப் பார்த்ததும் கண்களில் வியப்பு காட்டிவிட்டு கம்ப்யூட்டரை அணைத்தார்.

"ஹலோ... குணசேகர்... குட்மார்னிங்..."

"குட்மார்னிங் ரிச்சர்ட்..."

"என்ன இவ்வளவு காலையில் வந்திருக்கீங்க...? எனி அர்ஜென்ஸி...?"

"இல்லாமே வருவேனா...? இன்னிக்கு ஏர்லி மார்னிங் கீருவேலங்குப்பம் வளைவில் ஒரு டாடா சுமோ மரத்துல மோதி ஒரு மோசமான விபத்து. ஸ்பாட்லயே ஆறுபேர் காலி. பட், ஏழாவதா ஒரு பெண்ணோட டெட்பாடி ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்ல இருந்தது. ட்ரைவரோட ஸ்டேட்மெண்ட்படி மூணு ஆண் மூணு பெண்தான் வண்டியில வந்திருக்காங்க. இறந்து போயிருக்கிற நாலாவது பெண் யாரென்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு முகம் சிதைந்து போயிருந்தது. போலீஸ் டாக்கை ஸ்மெல் பண்ண விட்டதில், அது ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடிப்போய் ஒரு மயானத்துக்குள் நுழைஞ்சு, பூமியைப் பிறாண்ட அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்ததுல அடக்கம் செய்யப்பட்ட ஒரு இளைஞரோட உடல். அதே குழியில் இந்த டைரியும் கிடைச்சது. டைரி முழுக்க புரியாத வார்த்தைகள். போதாக் குறைக்கு ஏழு சைபர்களோடு ஒரு டெலிபோன் நம்பர். எல்லாமே உலக மஹா குழப்பம். பி.பி. 'கிர்'ன்னு ஏறி தலையே ரெண்டா விண்டுடும் போல் இருக்கு."

குணசேகர் நீட்டிய டைரியை வாங்கி பக்கங்களைப் புரட்டினார் ரிச்சர்ட்.

''இதயத்தைக் கிழிக்கிற மாதிரியான இந்த ருத்தீட்டிஸ்டிக்கரைப் பார்த்தா இது ஏதோ தீவிரவாத அமைப்புன்னு என் மனசுக்குப் படுது...''

''என்னோட யூகமும் அதுதான் ரிச்சர்ட். அந்த கோட் வேர்ட்களைப் பார்த்திங்களா?''

''ம்... பார்த்தேன். பறக்கும் யானை, ப்ரிக் ஸில்க், கோட்சே பொதுக்கூட்டம், வாக்கிங், பிரசாதம்... இதுதானே...?''

''ஆமா...! அதுக்கெல்லாம் என்ன அர்த்தம் ரிச்சர்ட்...?''

ரிச்சர்ட் சில விநாடிகள் கண்களை மூடி யோசித்துவிட்டு, ஷெல்ஃபிலிருந்து வேறு ஒரு ஃப்ளாப்பியை எடுத்து கம்ப்யூட்டர்க்கு கொடுத்து கீபோர்டில் எண்களைத் தட்டினார். மானிட்டர் திரையில் CODE WORD KEY என்ற எழுத்துக்கள் சிவப்பு நிறத்தில் ஜனித்தன.

பறக்கும் யானை என்ற எழுத்துக்களை டைப் செய்ய CODE WORD KEY அதற்கான பதிலை எழுதிக் காட்டியது.

''பறக்கும் யானை...?''

''ஜம்போ ஜெட் விமானம்.''

''ப்ரிக் ஸில்க்...?''

''செங்கல்பட்டு...''

''கோட்சே பொதுக்கூட்டம்?''

''கமிட்டி கூடுகிறது.''

''வாக்கிங்...?''

''நடராஜன்...''

''பிரசாதம்...?''

''தோட்டா...''

குணசேகர் வியர்த்துக்கொண்டே பிரமித்தார். ''ரிச்சர்ட்! இது நிச்சயமாக ஒரு தீவிரவாத அமைப்புதான். நோட்டவுட்... கோட் வேர்ட்ஸுக்கு அர்த்தம் கண்டுபிடிச்சுக் கொடுத்த மாதிரி, இந்த ஏழு சைபர்களுக்கு பின்னாடி இருக்கிற டெலிபோன் நம்பர் எதுன்னு சொல்லிட்டா கேஸ் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்துடும்.''

ரிச்சர்ட் டைரியில் எழுதப்பட்டிருந்த அந்த ஏழு சைபர்களையும் பார்த்தார்.



பத்தே விநாடிகள்தான்! அவர் முகம் புன்னகைக்கு வந்தது.

''இது ரொம்பவும் ஈஸி கோட் வேர்ட் மிஸ்டர் குணசேகர். பார்க்கிறதுக்கு குழப்பமாயிருக்கும். பட் வெரி ஈஸி டு ஃபைண்ட் அவுட்...''

''எனக்குப் பிடிபடலை...''

''இந்த ஏழு சைபர்களிலும் ரெண்டே ரெண்டு எண்கள்தான் ஒளிஞ்சிட்டிருக்கு...''

''என்ன எண்கள்...?''

''ஆறு... ஒன்பது.''

குணசேகர் மறுபடியும் அந்த சைபர்களைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார்.

''புரியலையே...?''

''இப்ப புரிஞ்சுக்கப் பாருங்க...'' சொன்ன ரிச்சர்ட் அந்த ஏழு சைபர்களையும் ஒரு துண்டுப் பேப்பரில் வரைந்தார்.

''குணசேகர்! இப்போ முதல் சைபர்க்கு வருவோம். புள்ளி எங்கே இருக்கு...?''

''மேலே...''

''சைபரிலிருந்து அந்தப் புள்ளிக்கு ஒரு கோடு இழுங்க. என்ன நம்பர் வருது...?''

இழுத்தார்... கண்கள் வியப்பில் ஒரு மில்லி மீட்டர் விரிந்தன. சொன்னார்.

''ஆறு...''

''இரண்டாவது மூன்றாவது சைபர்களில் புள்ளிகள் எங்கே இருக்கு...?''

''கீழே...''

''சைபர்களிலிருந்து அந்த ரெண்டு புள்ளிகளுக்கும் கோடுகளை இழுங்க...''

ரிச்சர்ட் சொல்ல குணசேகர் இழுத்தார். அது இரண்டு ஒன்பதுகளாய் மாறியது. நான்காவது சைபர் மேல் புள்ளியின் காரணமாக எண் ஆறாகவும் ஐந்தாவது சைபர் கீழ்ப் புள்ளி மூலமாக எண் ஒன்பதாகவும் ஆறு, ஏழு சைபர்கள் மேல் புள்ளிகள் காரணமாக இரண்டு ஆறுகளாகவும் உருமாற எண் இப்போது முழுமையாய்ப்

பார்வைக்குக் கிடைத்தது.

6996966

குணசேகர் ரிச்சர்டின் கைகளைப் பற்றிக் குலுக்கினார். ''பெண்டாஸ்டிக்... மிஸ்டர் ரிச்சர்ட்.....''

''இந்த கோட்வேர்ட் முறைக்கு 'டாட்ஸ் தியரி'ன்னு பேர்... இப்ப இந்த டெலிபோன் நம்பர் யாரோடதுன்னு எக்சேஞ்சுக்கு போன் பண்ணிக் கேட்டுடலாமா...?''

''ப்ளீஸ்...''

ரிச்சர்ட் டெலிபோனை நகர்த்திப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ரிஸீவரை எடுத்து எண்களைத் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

''ஹலோ... எக்சேஞ்ச் என்கொயரி?''

''எஸ்...''

''நாங்க ஃபாரன்ஸிக்கிலிருந்து பேசறோம்.''

''சொல்லுங்க ஸார்...''

''சந்தேகத்துக்குரிய ஒரு டெலிபோன் நெம்பர் போலீஸுக்கு கிடைச்சிருக்கு. அந்த நெம்பர்க்குரிய நபர் யாரு, அவர் அட்ரஸ் எதுங்கிற விபரங்கள் வேணும். இட்ஷ் அட்பி இன் ஏ நப் ஷெல்.''

''நம்பர் சொல்லுங்க ஸார்.''

''ஸிக்ஸ் டபுள் நைன் ஸிக்ஸ் நைன் டபுள் ஸிக்ஸ்.''

''ஒன் மினிட் ஸார். லைன்லயே இருங்க.''

ரிச்சர்ட் காத்திருந்தார்.

சரியாய் ஒரு நிமிஷம் கடந்து போயிருக்க ரிஸீவரில் குரல் கேட்டது.

''ஸார்...''

''சொல்லுங்க...''

''நீங்க சொன்ன அந்த 6996966 நம்பர் நடிகை ஜெயஸ்ரீதாவோடது. அது அவங்களோட ரகசிய நம்பர்...''

ஜி ஹெச்.

இன்ஸ்பெக்டர் பராந்தகனும் ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதாவும் தலைமை டாக்டர் செரியன் அறைக்குள் நுழைந்தபோது, அவர் வாஷ்பேஸினில் லிக்விட்



சோப்பால் கைகளைக் கழுவிக் கொண்டிருந்தார்.

''ஸாரி... ஃபார் தடிஸ்டர்பன்ஸ் டாக்டர்.''

''ப்ளீஸ்... கம்...'' நாற்காலிகளைக் காட்டிவிட்டு டவலால் கைகளைத் துடைத்தபடி வந்து நாற்காலியில் சாய்ந்தார் செரியன்.

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

பராந்தகன் மென்ன பேச்சை ஆரம்பித்தார். ''டாக்டர்...! ரெண்டு நாளைக்கு முன்னாடி உடல்நலக் குறைவு காரணமா இங்கே அட்மிட் செய்யப்பட்ட கைருங்கிற ஆயுள் தண்டனைக் கைதி இங்கேயிருந்து தப்பிச்சுட்டு போயிட்டதா ஒரு தகவல் கிடைச்சது. உண்மையா...?''

''இதை உங்களுக்கு யார் சொன்னது?''

''சொன்னவங்களைப் பத்தி இப்ப என்ன டாக்டர்? நான் கேள்விப்பட்ட தகவல் உண்மையா பொய்யா? அதைச் சொல்லுங்க...''

டாக்டர் செரியன் பெருமூச்சொன்றை வெளியிட்டு விட்டு தலையாட்டினார்.

''தகவல் உண்மைதான். அந்தக் கைதி இங்கே அட்மிட்டான அன்னிக்கு ராத்திரியே எப்படியோ தப்பி ஓடிட்டான். இது முழுக்க முழுக்க காவலுக்கு இருந்த சென்ட்ரி போலீஸோட குற்றம். ஹாஸ்பிட்டல் நிர்வாகம் இதுக்கு பொறுப்பில்லை.''

''கைதி தப்பிப் போய்விட்ட விஷயத்தை வெளியே ஏன் தெரியப்படுத்தலை?''

''சிறை ஐ.ஜி. தான் 'விஷயம் வெளியே யார்க்கும் தெரிய வேண்டாம். இன்னும் ரெண்டு நாளைக்குள்ளே எப்படியும் கண்டுபிடிச்சுடலாம்'னு சொன்னார்.''

''டாக்டர்! அந்த தப்பியோடிய கைதிக்கு என்ன உடல் நலக் குறைவு...?''

''அவனுக்கு உடல்நலம் பிரச்சினையில்லை...''

''பின்னே...?''

''அவன் மனநலம் பாதிக்கப்பட்டவன், கொலைவெறி அவனுடைய ரத்தத்தில் கலந்து தலைக்கேறியிருந்தது...''

# 6



இன்ஸ்பெக்டர் பராந்தகன் கண்களில் பரவிக் கொண்ட கலவரத்தோடு டாக்டர் செரியனை ஏறிட்டார்.

"தப்பியோடியிருக்கும் கைதி கனகு மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியா...?"

"எஸ்...! சப்கான்ஷியஸ் மைண்டில் அவனோடு பேசிப் பார்த்தபோது அவன் ஒரு கொலை வெறிபிடித்த பேர்வழி என்பது தெரிந்தது. போலீஸ் காவலை பலப்படுத்தி கொஞ்சம் ஜாக்கிரதையோடு இருந்திருந்தால், அவனால் தப்பித்துப் போயிருக்க முடியாது. நடந்துவிட்ட தப்புக்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியது காவல்துறையே தவிர, ஹாஸ்பிட்டல் நிர்வாகம் அல்ல. சிறை நிர்வாக ஐ.ஜி. கேட்டுக்கொண்டதற்கிணங்க, நான் இந்தச் செய்தியை வெளியே சொல்லாமல், பத்திரிகைக்காரர்கள் மோப்பம் பிடித்து விடாமல் அடைகாத்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் இந்தப் பிரச்னை குறித்து ஏதாவது பேசவேண்டு மென்றால், சிறை நிர்வாக ஐ.ஜி.யிடம் போய் பேசிக் கொள்வது உத்தமம்."

இன்ஸ்பெக்டர் பராந்தகன் இரண்டு தோள்களையும் குலுக்கினார்.

"ஸாரி... டாக்டர்... சிறை சம்பந்தப்பட்ட விஷயத்தில் மேலதிகாரத்தில் ஒரு விஷயத்தை ரகசியமாக வைத்துக் கொண்டிருக்கும்போது, நான் போய் அவர்களிடம் கேட்பது முறையாக இருக்காது. நான் உங்களிடமே விசாரணையை முடித்துக்கொண்டு போகும் எண்ணத்தில் தான் வந்திருக்கிறேன். இன்றைக்குக் காலையில் ஒரு கல்யாண மண்டபத்தில் மாப்பிள்ளையாக இருந்த தேவேந்திரன் என்கிற நபர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். கொலையாளி மண்டபத்தின் பின்பக்க காம்பௌண்ட் சுவர் ஏறிக் குதித்து சுவாஸகி



பைக்கில் ஏறி தப்பித்துப் போகும்போது அந்தப் பக்கமாய் ரோந்து வந்த இன்ஸ்பெக்டர் கிஷோர் பார்த்துவிட்டு ஃபாலோ பண்ணியிருக்கார். ஒரு டெலிபோன் பூத்தில் புகுந்து யாருக்கோ போன் பண்ணிட்டிருந்த அவனை மடக்கி விசாரித்தபோது, கிஷோரைத் தாக்கி காயப் படுத்திட்டு தப்பிச்சுட்டான் கொலையாளி. அவன் ஒருவேளை கைதி கனகுவாக இருக்கலாமோ என்கிற எண்ணத்தில்தான் இங்கே விசாரணைக்காக வந்தேன்."

டாக்டர் கேட்டார்.

"அந்த இன்ஸ்பெக்டர் கிஷோர் இப்போது எங்கே?"

"ஒரு பிரைவேட் ஹாஸ்பிட்டலில் அட்மிட்டாகி ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டிருக்கார்."

"அப்படியென்றால் இன்ஸ்பெக்டர் கிஷோர் கொலையாளியை நன்றாய்ப் பார்த்திருக்கிறார்...?"

"ஆமாம்..."

"என்ன அடையாளம் சொன்னார்...?"

"வயது முப்பது. நல்ல உயரம். மாநிறம். கொஞ்சம் புடைத்த மாதிரியான மூக்குக்குக் கீழே பெரிய மீசை. இரட்டை மோவாய். பான்கறை பல்வரிசை."

டாக்டர் மெல்ல தலையாட்டினார். "நீங்கள் சொல்கிற அடையாளங்கள் கைதி கனகுவோடு ஓரளவுக்குப் பொருந்தி வருகிறது. என்னிடம் கனகுவின் போட்டோ இருக்கிறது. தருகிறேன். கொண்டுபோய் இன்ஸ்பெக்டர் கிஷோரிடம் காட்டுங்கள். அவர் பார்த்து கனகுதான் என்று சொல்லிவிட்டால், அதற்குப் பிறகு போலீஸ்துறை சகல திசைகளிலும் மும்முரமாய் இயங்கி அவனை உடனடியாய்க் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். இல்லை யென்றால் வெறிபிடித்த மனநோயாளியான அவனால் கொலைகள் தொடர்கதையாகிவிடும்." டாக்டர் சொல்லிக் கொண்டே தன் மேசையின் இழுப்பறையைத் திறந்து, கனகுவின் போட்டோவை எடுத்துக்கொடுத்தார். "இது ட்ரீட்மெண்ட் ஃபைலில் இருந்த போட்டோ. மறுபடியும் என்னிடமே கொண்டு வந்து கொடுத்து விடுங்கள்..."

"ஷ்யூர்." இன்ஸ்பெக்டர் பராந்தகன் போட்டோவை வாங்கிக் கொண்டு ப்ராஸிக்யூட்டர் நிவேதிதாவோடு

அறையினின்றும் வெளிப்பட்டு வராந்தாவில் நடந்தார்.

"நிவேதிதா..."

"ஸார்.:"

"இந்தக் கைதி களவு தப்பிச்ச விவகாரம் நமக்குள்ளேயே இருக்கட்டும். வெளியே யார்கிட்டேயும் லூஸ் டாக் வெச்சுக்க வேண்டாம்."

"எனக்குத் தெரியாதா...? இதை நீங்க சொல்லணுமா ஸார்? இன்ஸ்பெக்டர் கிஷோர்கிட்ட மொதல்ல இந்த போட்டோவைக் காட்டி அவர் பார்த்தது களவுவைத் தானான்னு வெரிஃபை பண்ணிக்கலாம். இவர் களவுதான்னு சொல்லிட்டா உங்க டிபார்ட்மெண்ட் அவனைக் கண்டுபிடிக்க என்னதான் ரகசியமான முயற்சிகளை எடுத்துக்கிட்டாலும், பத்திரிகை நிருபர்களுக்கு தெரியாமப் போயிடாது. இந்த நியூஸ் ஒரு நெருப்புக்கட்டி மாதிரி. ரொம்ப நேரத்துக்கு அடைகாக்க முடியாது."

ஹாஸ்பிட்டலின் வாசலுக்கு வந்து இருவரும் காத்திருந்த ஜீப்பில் ஏற, ஒரு இருபது நிமிஷ பயணத்துக்குப் பின் இன்ஸ்பெக்டர் கிஷோர் அனுமதிக்கப்பட்டிருந்த ஹாஸ்பிட்டல் வந்தது.

இருவரும் ஜீப்பைவிட்டு இறங்கி உள்ளே போகும் போதே டாக்டர் ஜெயராமன் எதிர்ப்பட்டார்.

பராந்தகன் நின்றார்.

"டாக்டர்! இன்ஸ்பெக்டர் கிஷோரை உடனடியா நாங்க பார்க்கணும்... அவர் இப்போ எந்த ரூம்ல இருக்கார்...?"

டாக்டர் ஜெயராமன் அவரை சற்றே கவலையோடு பார்த்தார்.

"உங்களுக்கு விஷயம் தெரிய நியாயமில்லை... நீங்க இந்த ஹாஸ்பிட்டலை விட்டுப் புறப்பட்ட கொஞ்ச நேரத்துக்குள்ளேயே கிஷோரோட நிலைமை திடீர்னு சீரியஸாயிடுச்சு..."

"டா... டாக்டர்... நீங்க... என்ன சொ... சொல்றீங்க...?"

"எஸ்...! கிஷோரின் தலையில் அடிபட்டிருந்த காயத்தை சாதாரணக் காயமா நினைச்சு ட்ரீட்மெண்ட் கொடுத்தது தப்பா போயிடுச்சு."



"ஏன்... என்னாச்சு... டாக்டர்?"

"கிஷோருக்கு ப்ரெய்ன் டேமேஜ். மூளையோட ஃபிப்ட்டி பர்செண்ட் போர்ஷன் ரத்தம் கட்டி உறைஞ்சு போயிட்டதால கோமா ஸ்டேஜுக்கு போயிட்டார். இனி அவருக்கு கான்ஷியஸ் வரணும்ன்னா இம்மீடியட்டா ஒரு ஆப்ரேஷன் பண்ணியாகணும். இந்த ஆப்ரேஷனோட சக்சஸ் ரேட் ஃபார்ட்டி பர்ஸெண்ட்தான். கிஷோர் உயிர் பிழைச்சா அது மிகப்பெரிய ஒரு அதிசயம்."

இன்ஸ்பெக்டர் பராந்தகனும் பிரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதாவும் கவலை ஈஷிக்கொண்ட பார்வைகளை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள்.

இண்டர்காம் டெலிபோன் எழுப்பிய இன்னிசையைக் கேட்டு தூக்கத்தின் பிடியில் சிக்கியிருந்த நடிகை ஜெயகீதா கஷ்டப்பட்டு இமைகளைப் பிரித்தாள்.

ராத்திரி வெகு நேரம் நடந்த டான்ஸ் ஷெட்யூல் ஷூட்டிங் அவளுடைய அறுபது கிலோ உடம்புக்கு ஏகப்பட்ட களைப்பையும் கண்களுக்கு மிளகாயைத் தேய்த்த மாதிரியான எரிச்சலையும் கொடுத்திருந்தது.

புரண்டவள் கண்களை மூடியபடியே கை நீட்டி ரிஸீவரை எடுத்தாள். தூக்கம் கெட்டுப்போன கோபத்தில் கேட்டாள் "யாரு...?"

"மேடம்...: நான் நீலகண்டன்" அவளுடைய மேனேஜரின் குரல் கேட்டது.

"என்ன...?"

"உங்களைப் பார்க்க இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வந்திருக்கிறார்..."

"எதுக்கு...?"

"தெரியலை மேடம்... ஏதோ இன்வெஸ்டிகேஷன்னு சொன்னார்..."

ஜெயகீதாவின் கண்களில் ஒட்டிக் கொண்டிருந்த தூக்கக் கலக்கம் சட்டென்று விலகிக் கொள்ள, எழுந்து உட்கார்ந்தாள்.

"என்ன இன்வெஸ்டிகேஷன்...? நீங்க விவரம் கேட்கலையா...?"

''கேட்டேன் மேடம். ஆனா அவர் உங்ககிட்டத்தான் பேசணும்ன்னு சொல்லிட்டார்...''

''அவரை அங்கே உட்கார வைக்க வேண்டாம். ப்ரஸ் ரிப்போர்ட்டர்ஸ் பார்த்துட்டாங்கன்னா கண், மூக்கு வெச்சு கண்ணாபின்னான்னு 'கிசுகிசு' எழுதிடுவாங்க. இன்ஸ்பெக்டரை உள்ளே இருக்கிற அறைக்கு கூட்டிட்டு போய் உட்கார வையுங்க.''

''எஸ்... மேடம்...''

ஜெயகீதா எழுந்து வாஷ்பேசினில் முகம் கழுவி நைட்டியை உரித்து விட்டு சுடிதார்க்குள் நுழைந்தாள். கலைந்த தலைக் கேசத்தை பிரஷ்ஷால் 'கோம்ப்' செய்து கொண்டு, அறையினின்றும் வெளிப்பட்டு இன்ஸ்பெக்டர் உட்கார வைக்கப்பட்டிருந்த அறையை நோக்கிப் போனாள்.

மனசுக்குள் ஒரு பயம் 'பக்பக்'கென்று நொண்டியடித்தது.

'எதற்காக இன்ஸ்பெக்டர் வந்திருப்பார்...?'

'சமீபத்தில் எந்த ஒரு பிரச்னையிலும் மாட்டிக் கொண்டதாய் ஞாபகம் இல்லையே...'

யோசனையில் நடை போட்டு ஹாலைக் கடந்து, கடைசியில் இருந்த அந்த அறைக்குள் நுழைந்தாள். இருதயம் பயத்தில் கெட்டித்துப் போயிருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தாள்.

''வாங்க... இன்ஸ்பெக்டர்...''

சோபாவுக்கு சாய்ந்து சினிமா இதழ் ஒன்றை புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் குணசேகர், அதை அப்படியே டீபாயின் மேல் வைத்துவிட்டு நிமிர்ந்தார்.

''ஸாரி மேடம்... நீங்க ரெஸ்ட் எடுத்துக்கிட்டிருக்கிற நேரத்துல வந்து உங்களை தொல்லைப்படுத்திட்டேன்...''

''நோ... நோ...! நீங்க ஏதோ ஒரு முக்கியமான காரியத்துக்காக வந்திருக்கீங்க. ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியது என்னோட கடமை.''

''தேங்க்யூ வெரிமச்... ஃபார் யுவர் கைண்ட் கோவாப்ரேஷன்...''

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்...! என்ன விஷயமா



என்னைப் பார்க்க வந்திருக்கீங்க...?''

''ஒரு என்கொயரி...! இன்னிக்கு சிட்டி அவுட்டர்ல கருவேலங்குப்பம் வளைவில், ஒரு டாடா சுமோ கார் மரத்தில் மோதி ஒரு மோசமான விபத்து நடந்தது. அந்த விபத்துல ஆறு பேர் ஸ்பாட் டெத். ஆனா விபத்துக்கு சம்பந்தப்படாத ஒரு பெண்ணோட டெட்பாடியும் அந்த இடத்துல இருந்தது. முகம் சிதைக்கப்பட்ட நிலையில் அந்தப் பெண் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டுக்கிடந்தா... ஸ்பாட்டுக்கு போலீஸ் நாயைக் கொண்டு வந்து சேஸ் பண்ண வெச்சோம்...''

ஜெயகீதா தன் கரிய விழிகளில் கலவரத்தை நிரப்பியபடி கேட்டுக் கொண்டிருக்க, குணசேகர் தொடர்ந்தார்.

''அந்தப் பெண்ணோட டெட்பாடியை ஸ்மெல் பண்ணின நாய், சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடி ஒரு மயானத்துக்குள்ளே நுழைஞ்சு தரைப் பகுதியை கிளறிக்காட்டியது. உடனே அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தோம். புதைக்கப்பட்ட அதே இடத்துல ஒரு டைரியும் கிடைச்சது. அந்த டைரியில் உங்க ரகசிய டெலிபோன் நம்பர் டாட்ஸ் தியரி என்கிற முறையில் எழுதப்பட்டிருந்தது.

''என்னோட டெலிபோன் நம்பரா?''

''எஸ்... உங்க ரகசிய டெலிபோன் நெம்பர் 6996966 தானே...?''

''ஆமா...''

''அதே நம்பர்தான் அவனோட டைரியில் இருந்தது.''

''ஆச்சரியமாயிருக்கே...! அவன் பேர் என்ன?''

''பேர் தெரியலை...''

''போட்டோ இருக்கா...?''

''இதோ...!'' போலீஸ் போட்டோ கிராபரால் எடுக்கப்பட்ட அந்த இளைஞனின் போட்டோக்களை ஒரு ப்ரவுன் கவரினின்றும் உருவி ஜெயகீதாவிடம் நீட்டினார் குணசேகர். போட்டோக்களை வாங்கிப் பார்த்த ஜெயகீதாவின் முகத்தில் ஒரு பூகம்பம் நிலை கொண்டது.

கண்ணனின் அவஸ்தையைப் படித்துவிட்ட

இன்ஸ்பெக்டர் குணசேகர் கேட்டார்.

''மேடம்...! இந்த நபரை உங்களுக்குத் தெரியுமா?''

''தெ...தெ...தெரியும்...''

''யார்...?''

''எ... எ... என்னோட க... க... கணவர்...''

# 7



இன்ஸ்பெக்டர் குணசேகரின் கண்களில் வியப்பு ஒட்டிக் கொண்டது. நடிகை ஜெய சீதாவை ஆச்சர்யம் விலகாத ஒரு பார்வை பார்த்துக் கொண்டே கேட்டார்.

''மேடம்... அந்த நபர் உங்க கணவரா...?''

அவள் மெதுவாய் தலை அசைத்துவிட்டு புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் ஒரு வெறுமை தெரிந்தது.

''இவர் ஒரு காலத்துல எனக்கு கணவர். இப்போ கிடையாது.

குணசேகர் கேட்டார்.

''மேடம்! நீங்க சொல்றது எனக்கு புரியலை...''

''நான் இந்த சினிமா உலகத்துல அவ்வளவா பிரபலமாகாத ஒரு ஸ்டேஜில் இருந்தபோது அதாவது ரெண்டு வருஷத்துக்கு முந்தி என்னை வேண்டா வெறுப்பா கல்யாணம் பண்ணிக்கிட்டார். எந்த ஒரு நல்ல பழக்கமும் அந்த மனுஷன்கிட்ட கிடையாது. என்னையே பெரிய பெரிய புள்ளிகளுக்கு ராத்திரி நேரங்கள்ல விற்கப் பார்த்தார். நான் அதுக்கு சம்மதிக்காமே போகவே என்னை விட்டு விலகிப் போயிட்டார். அதைப்பத்தி நானும் கவலைப்படலை. ஒரு நல்ல டைரக்டரோட முயற்சியால் சினிமா வாய்ப்புகள் கிடைச்சு இன்னிக்கு ஃபீல்டுல நான் ஓஹோன்னு இருக்கேன். நான் ஒரு நல்ல நிலைமைக்கு வந்ததுமே என்கூட வந்து ஒட்டிக்கப் பார்த்தார். நான்



சேர்த்துக்கலை.''

''இவர் பேர் என்ன...?''

''நடேஷ்.''

''அட்ரஸ்...?''

''எனக்குத் தெரியாது...''

''கடைசியா நடேஷை என்னிக்கு பார்த்தீங்க...?''

''ஒரு மாசத்துக்கு முந்தி ராத்திரி நேரம் கூர்க்காவை எப்படியோ ஏமாத்திட்டு உள்ளே வந்துட்டார். பணம் வேணும்னு கேட்டார். நான் கொடுக்கமாட்டேன்னு சொன்னதும் கண்டபடி சத்தம் போட ஆரம்பிச்சார். நான் உடனே போலீஸுக்கு போன் பண்ணிட்டேன். இந்த ஏரியா பீட் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து மிரட்டினப்புறம் தான் வெளியே போனார். அதுக்கப்புறம் ஒரு தடவை போன் பண்ணினார். நான் பேசாமே ரிஸீவரை வெச்சுட்டேன்.''

''உங்க கணவர் நடேஷ் என்ன தொழில் பார்த்துட்டிருந்தார்...?''

''சட்ட விரோதமான தொழில்கள்... எல்லாமே அவர்க்கு அத்துபடி. கொஞ்சம் தீவிரவாத டைப். கையில் ஒரு கூலிப்படையை வெச்சுக்கிட்டு வேண்டாத ஆட்களோட கையையும் - காலையும் வெட்றதுதான் வேலை. இதைத்தவிர போதை மருந்து விற்பனையும் உண்டு.''

''நடேஷ்க்கு இந்த சென்னைல க்ளோஸ் ஃப்ரண்ட் யாரு...?''

''எனக்குத் தெரியாது. ஆனா பனகல் பார்க்குக்குப் பக்கத்துல 'பாட்ஷா பான் பீடா ஸ்டால்'ன்னு ஒரு கடை இருக்கு. நடேஷை அந்த பீடாக் கடையில்தான் நிறைய தடவை பார்த்திருக்கேன். அங்கே விசாரிச்சா உங்களுக்கு ஏதாவது உபயோககரமான தகவல் கிடைக்கலாம்.''

''தேங்க்யூ மேடம்...'' இன்ஸ்பெக்டர் குணசேகர் எழுந்தார். ஜெயசீதா குரலை தழைத்துக் கொண்டாள்.

''இன்ஸ்பெக்டர்! ஒரு சின்ன ரிக்வெஸ்ட்...''

''சொல்லுங்க மேடம்...''

''நடேஷும் நானும் கணவன் மனைவின்னு வெளியுலகத்துக்குத் தெரியாது. இனியும் தெரிய வேண்டாம். ஒரு கிரிமினல் பேர்வழி எனக்கு

கணவராயிருந்திருக்கார்ங்கிற விஷயம் வெளியே தெரிஞ்சா அது எனக்கு இப்போ ஃபீல்ட்ல இருக்கிற இமேஜைக் காயப்படுத்தும். ஸோ என் கணவரோட உடலை நான் வாங்கி இறுதி காரியங்களை செய்ய விரும்பலை. உடலை போலீஸ் தரப்பிலேயே அடக்கம் பண்ணிடுங்க...''

''இதை நீங்க ஒரு ரிப்போர்ட்டா எழுதித்தரணும். ஏன்னா பின்னாடி ஏதாவது பிரச்னை வந்தா அதை நாங்க ஃபேஸ் பண்ணியாகணும்.''

''ரிப்போர்ட் தர்றேன்...''

''நீங்க எழுதி வையுங்க மேடம். எஸ்.ஐ. வந்து வாங்கிக்குவார்.''

குணசேகர் நடிகை ஜெயஸ்ரீயாவிடம் விடைபெற்றுக் கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த ஜீப்புக்கு வந்து ஏறி உட்கார்ந்தார். டிரைவரிடம் 'பனகல் பார்க்' என்று சொல்லி விட்டு சீட்டுக்கு சாய-ஜீப் வேகம் எடுத்து இருபது நிமிஷங்களை பயணத்தில் கரைத்துவிட்டு பனகல் பார்க்கிற்கு முன்பாய் போய் நின்றது.

இன்ஸ்பெக்டர் குணசேகர் இறங்கி நின்று சுற்றும் முற்றும் பார்க்க பஸ் ஸ்டாப்புக்கு பக்கத்திலேயே அந்த பான்பீடா கடை தெரிந்தது. கடையின் முகப்பில் ''பாட்ஷா பான் பீடா ஸ்டால்'' போர்டு தொங்க உள்ளே பனியன் லுங்கியோடு ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். குணசேகர் அவனை நோக்கிப் போனார். போலீஸ் யூனிஃபார்மை பார்வையில் வாங்கியதும் அவன் தயக்கமாய் எழுந்து நின்று லுங்கியை தழையவிட்டான். தயங்கி மெல்ல விஷ் செய்தான்.

''ஸார்...''

''ஒரு பான்மசாலா போடு...''

பரபரவென்று செயல்பட்டான். கெட்டுப் போகாத நல்ல வெற்றிலையாய் எடுத்து கத்தரிக்கோலால் அதன் ஓரங்களை வெட்டி இலைபரப்பு பூராவும் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டிருந்தபோது குணசேகர்



மெதுவாய் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

''நடேஷ் எப்போ உன் கடைக்கு கடைசியா வந்தான்...?''

சுண்ணாம்பு தடவிக்கொண்டிருந்த கை அப்படியே நின்றது. கண்கள் திகைக்க நிமிர்ந்தான்.

''ந...ந...நடேஷா...?''

''ம்...நடேஷ்தான்...''

''யார்...ஸார்...அது...?''

''நடேஷ் யார்ன்னு நிஜமாவே உனக்குத் தெரியாதா...?''

''தெ...தெரியாது ஸார்...''

''சரி... கடையை சாத்திட்டு புறப்படு. லாக்கப்புக்குப் போய் எல்லாத்தையும் பேசிக்கலாம்.''

''ஸ...ஸார்...''

''எப்படி வசதி...! நடேஷைப்பத்தி இங்கேயே சொல்றியா... இல்லே போலீஸ் லாக்கப்புக்கு வந்து சொல்றியா?''

அவன் எச்சில் விழுங்கிவிட்டு மெல்லத் தலையை ஆட்டினான்.

''இங்கேயே சொல்றேன் ஸார்...''

''சொல்லு...''

''நடேஷ் போனவாரம் இங்கே வந்திருந்தான் ஸார்...''

''எதுக்கு வந்தான்...?''

''அவன் என்னோட கஸ்டமர் ஸார், பீடா போடறதுக்காக அடிக்கடி வருவான்.''

''முதல்ல உனக்கு கஸ்டமர். அப்புறம் ஃப்ரண்ட் ஆயிட்டான். அப்படித்தானே...?''

''ஆமா... ஸார்...'' தொண்டைக் குழி வியர்வையில் மின்னியது.

''சரி... உம் பேர் என்ன...?''

''பாட்ஷா ஸார்...''

''முழுப் பேர்...?''

''அன்வர் பாட்ஷா ஸார்...''

''அப்பா பேர்...?''

''ஜயருல்லா ஸார்...''

''அம்மா பேர்...?''

''ஜமீலா ஸார்...''

''உனக்கு சிஸ்டர்ஸ், ப்ரதர்ஸ் இருக்காங்களா?''

''இல்ல ஸார்...''

''உனக்கு கல்யாணம்?''

''இன்னும் இல்ல ஸார்...''

''யாரையாவது காதலிக்கிறியா...?''

''இல்ல ஸார்...''

எதற்காக இத்தனை கேள்விகள் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே குணசேகர் கேட்டார்.

''உன் இடது கை விரல்ல ஒரு மோதிரம் போட்டிருக்கியே அதைக் கொஞ்சம் கழட்டிக் குடு...''

பாட்ஷாவின் முகம் வெளிறியது.

''ஸ... ஸார்...''

''ம்...! கழட்டிக் குடு...''

பாட்ஷா தயங்கித் தயங்கி தன் இடது கை விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தான். குணசேகர் அதை வாங்கி உயர்த்திப் பிடித்து பார்த்தபடியே சொன்னார்.

''இது லேடீஸ் மட்டுமே அணியக்கூடிய மோதிரம். என்கிற இனிஷியல் வேற 'M' பொறிக்கப்பட்டிருக்கு. யார் இந்த 'எம்'...?''

பாட்ஷா வியர்த்தான்.

''ஸா... ஸார்... இது வந்து...''

''பொய் சொல்லிடாதே... உன் வீட்ல இருக்குற யாருக்குமே 'M' என்கிற எழுத்தில் பெயர் ஆரம்பமாகலை... உனக்கு மனைவியும் கிடையாது. காதலியும் கிடையாதுன்னு சொல்லிட்டே... அப்படீன்னா... இந்த மோதிரம் யாரோடது...? 'எம்' என்கிற எழுத்தில் ஆரம்பமாகிற அந்த பொண்ணோட பேர் என்ன...?''

குணசேகர் கேட்ட கேள்வியில் பொறியில் மாட்டிக் கொண்ட எலியைப் போல் தத்தளித்தான் பாட்ஷா.

ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதாவும் இன்ஸ்பெக்டர்



பராந்தகனும் ஹாஸ்பிட்டலிலிருந்து புறப்பட்டு கல்யாண மண்டபத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

நிவேதிதா சொன்னாள்.

''ஸார், இன்ஸ்பெக்டர் கிஷோர் ஒருத்தர்தான் கொலையாளியை நேருக்கு நேர் பார்த்திருக்கார். அவர்க்கு இப்போ ப்ரெய்ன் டேமேஜ் ஏற்பட்டு கோமா ஸ்டேஜ்க்கு போய்ட்டார். கல்யாண மாப்பிள்ளை தேவேந்திரனை கொலை செஞ்சுட்டு தப்பிச்சுப்போனது இவருதானா இல்லையான்னு தெரிஞ்சுக்க ஒரே ஒரு வழிதான் இருக்கு ஸார்...''

''என்ன வழி...?''

''கனகுக்கும் தேவேந்திரனுக்கும் ஏதாவது முன்பகை இருந்ததான்னு தேவேந்திரன் சம்பந்தப்பட்ட ஃபேமிலி மெம்பர்ஸை விசாரிச்சா விஷயம் வெளியே வந்துடும் ஸார்...''

''நிவேதிதா...! கொலையான தேவேந்திரனைப்பத்தி சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேல் விசாரணை பண்ணி என்கிட்ட முதல் ரிப்போர்ட்டு கொடுத்துட்டார். அந்த ரிப்போட்டில் தேவேந்திரன் நார்மல் பர்ஸன்... அப்பாவின்னு சொல்லியிருக்கார். கல்யாணத்துக்கு வந்திருந்த அத்தனை ரிலேடிவ்ஸையும் கதிர்வேல் என்கொயர் பண்ணியதில் ஒருத்தர்கூட தேவேந்திரனைப் பத்தி தப்பா சொல்லலையாம்... பட் என்னோட கேள்வி இதுதான். ஒரு நல்ல மனிதர், அதுவும் கல்யாண நாள் அன்னிக்கே தாலி கட்டறதுக்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மிகவும் கொடூரமான முறையில் எதுக்காக கொலை செய்யப்படணும்...? தேவேந்திரன் மேல யார்க்கு என்ன கோபம் இருந்திருக்க முடியும்...?''

''ஸார்... இன்னிக்கு கொலை நடந்த முதல் நாள். இந்த ஒரு நாளிலேயே எல்லா உண்மைகளும் வெளியே வந்துடாது. இன்னும் ரெண்டு நாள் போனா போதும் தேவேந்திரனுக்குப் பின்னாடி ஒளிஞ்சிக்கிட்டிருக்கிற ஒவ்வொரு உண்மையும் வெளியே எட்டிப்பார்க்க

ஆரம்பிச்சுடும்..."

கல்யாண மண்டபம் வந்தது. மண்டபம் வெறிச்சோடி போயிருக்க, காவல்துறை தடயவியல் துறை சம்பந்தப்பட்ட ஆட்கள் மட்டும் ஆங்காங்கே தெரிந்தனர்.

இன்ஸ்பெக்டர் பராந்தகன், ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா இரண்டு பேரும் இறங்கி கல்யாண மண்டபத்துக்குள் நுழைய, சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேல் எதிர் கொண்டார்.

பராந்தகன் கேட்டார்.

"என்ன கதிர்வேல்...! ஃபர்தரா யாரையாவது என்கொயர் பண்ணீங்களா...? ஏதாவது யூஸ்ஃபுல் க்ளூ கிடைச்சுதா?"

கதிர்வேல் சொன்னார், "ஸார்! ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முந்திதான் ஒரு தகவல் கிடைச்சுது."

"என்ன தகவல்...?"

"இந்த கல்யாண மண்டப மேனேஜரை என்கொயர் பண்ணும்போது அவர் ஒரு விஷயம் சொன்னார் ஸார். நேத்து ராத்திரி பதினோரு மணி சுமார்க்கு கல்யாண மண்டபத்துக்கு ஒரு போன் கால் வந்ததாகவும் ஒரு பெண் பேசினதாகவும் அந்தப் பெண் தேவேந்திரனுடன் அவசரமாக பேச விரும்பினதாகவும் சொன்னார். மேனேஜர் உடனே மாப்பிள்ளை தேவேந்திரனுக்கு தகவல் கொடுத்திருக்கார். அவரும் வந்து போன்ல பேசியிருக்கார்."

"யார் அந்தப் பெண்...?"

"பேர் சொல்லியிருக்கா. மேனேஜர் அந்தப் பேரை ஒரு துண்டு சீட்ல எழுதி மேஜை மேல வெச்சிருந்தாராம். பேர் ஞாபகத்துக்கு வரலை. தேடிக்கிட்டிருக்கார் அந்த துண்டுச்சீட்டை."

மேனேஜர் அறை இருந்த பக்கம் மூன்று பேரும் நடக்க நடக்கவே எதிரே அந்த வழுக்கைத் தலை மனிதர் வந்தார்.

கதிர்வேல் சொன்னார்.

"அதோ...! மேனேஜரே வந்துட்டார்." அவர்களை நெருங்கிய மேனேஜரின் முகம் லேசாக வியர்வையில் பொடித்திருந்தது. கதிர்வேல் ஆர்வமாய் ஏறிட்டார்.

"ஸார்... அந்த துண்டு சீட்டு கிடைச்சுருச்சு..."

"போன் பண்ணின பெண்ணோட பேர் என்ன?"

"மேனகா... ஸார்."

# 8



இன்ஸ்பெக்டர் பராந்தகன் அந்தக் கல்யாண மண்டப மேனேஜரிடம் நிமிர்ந்தார்.

"பேர் என்ன சொன்னீங்க... மேனகாவா?"

"ஆமா... ஸார்..."

"கல்யாண மாப்பிள்ளை தேவேந்திரன் போன்ல அந்த மேனகாகிட்ட என்ன பேசினார்...?"

"அவங்க பேசினதை நான் கேட்கலை. போன் வந்திருக்கிறதாக கூப்பிட்டு விட்டுட்டு நான் மண்டபத்துக்கு பின்பக்கமா இருக்கிற ஜெனரேட்டரை ரிப்பேர் பார்க்கப் போயிட்டேன்."

"சரி.... அந்த மேனகா எந்த போன் நம்பரிலிருந்து பேசினாங்கிற விபரமாவது தெரியுமா?"

"தெரியாது ஸார்..."

"தேவேந்திரன் மேனகாகிட்ட போன்ல பேசும் போது ஆபீஸ் ரூம்ல வேற யாராவது இருந்தாங்களா?"

"இல்லை..."

"கதிர்வேல்...!" பராந்தகன் சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேலிடம் திரும்ப அவர் "எஸ்... ஸார்...." என்றபடி அட்டென்ஷனுக்கு வந்தார்.

"மண்டபத்துல தேவேந்திரனோட ஃபேமிலி மெம்பர்ஸ், ஃப்ரண்ட்ஸ் யாராவது இருக்காங்களா....?"

"இருக்காங்க ஸார்... விசாரணைக்காக சில நபரை நிறுத்தி வெச்சிருக்கேன்."

''அவங்களைக்கூட்டிக்கிட்டு வாங்க...''

கதிர்வேல், தலையசைத்துவிட்டு வேகவேகமாய்ப் போய் மண்டபத்தின் முன்பக்க ஹாலில் இருந்த பதினைந்து பேர் அடங்கிய ஒரு சின்ன கும்பலைக் கூட்டிக்கொண்டு வந்தார். அதில் ஐந்து பேர் பெண்கள், எல்லோரும் ஏறக்குறைய அழுது களைத்திருந்தார்கள்.

பராந்தகன் எல்லோரையும் பொதுவாய் ஒரு பார்வை பார்த்துக் கொண்டு கேட்டார்.

''நேத்து ராத்திரி பதினோரு மணி சுமார்க்கு மேனகாங்கிற ஒரு பொண்ணு இந்தக் கல்யாண மண்டபத்துக்கு போன் பண்ணி ''தேவேந்திரன்கிட்ட பேசியிருக்கா. அந்தப் பொண்ணு யார்ன்னு உங்கள்ல யார்க்காவது தெரியுமா?''

கும்பலில் மௌனம்.

பராந்தகன் சில விநாடிகள் கழித்து மறுபடியும் கேட்டார்.

''ம்... சொல்லுங்க... தெரியுமா... தெரியாதா...?''

எல்லோரும் 'தெரியாது' என்கிற மாதிரி தலையாட்ட பராந்தகன் சின்னதாய் ஒரு புன்னகை பூத்தார், எல்லோரையும் பார்வையால் நனைத்தபடியே நடை போட்டவர் அந்த இளைஞனுக்குப் பக்கத்தில் வந்து நின்றதும் கேட்டார்.

''உம் பேர் என்ன...?''

''பூபால் ஸார்...''

''நீ தனியா அப்படி போய் நில்லு...''

''எ... எதுக்கு ஸார்...?''

''போய்... நில்லு... சொல்றேன்.''

அந்த பூபால் தயக்கமாய் நடந்து போய் தள்ளி நிற்க இன்ஸ்பெக்டர் பராந்தகன் எதிர்திசையில் நின்றிருந்த இன்னொரு இளைஞனிடம் போனார்.

''உம் பேர் என்ன...?''

''மோகன் ஸார்''

''நீ பூபாலுக்கு பக்கத்துல போய் நில்லு.''

மோகன் தயங்க பராந்தகன் அவன் தோள்மேல் கையை வைத்து ''ம்... போ...! காரணம் இல்லாமே நான் எதையும் சொல்லமாட்டேன்...''



மோகன் பூபாலுக்குப் பக்கத்தில் போய் நின்றதும் பராந்தகன் மற்றவர்களை போகும்படி சொல்லிவிட்டு அந்த இரண்டு பேரிடமும் திரும்பி வந்தார். சில விநாடிகள் வரை அவர்களை மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மெல்லிய குரலில் கேட்டார்.

''இப்ப சொல்லுங்க...! அந்த மேனகா யாரு?''

பூபால் படபடத்தான்.

''நாங்கதான் தெரியாதுன்னு சொல்லிட்டோமே ஸார்?''

''ரெண்டு பேருமே தெரியாதுன்னு தலையாட்டினீங்க... நான் பார்த்தேன். அதுக்கு முன்னாடி இன்னொண்ணையும் நான் பார்த்துட்டேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கும்பல்ல பொதுவா ஒரு பார்வை பார்த்தபடி 'மேனகாவை உங்கள்ல யார்க்கு தெரியும்?' னு கேட்டேன். கேள்வியைக் கேட்டு முடிச்ச அந்த விநாடியே நீங்க ரெண்டு பேரும் மட்டும் கத்தி வீசினா மாதிரி சரேல்ன்னு ஒரு பார்வை பார்த்துக்கிட்டீங்க. கண்களாலேயே ஏதோ ஜாடை காட்டிக்கிட்டீங்க. போலீஸ்காரன் ஒரு கேள்வியைக் கேட்கும்போதே அவரோட பார்வை எல்லாருடைய முகத்தையும் படிக்கும்ன்னு உங்களுக்குத் தெரியலை. நான் உங்க ரெண்டு பேரோட முகத்தையும் படிச்சுட்டேன்....''

பூபாலும் மோகனும் இப்போது நெற்றி வியர்த்து உதடுகள் உலர்ந்து போயிருந்தார்கள்.

''ஸ... ஸார்.... அது... வந்து...''

''எனக்கு வேண்டியது உண்மை. சால்ஜாப்பு வேண்டாம். உங்க ரெண்டு பேர்க்கும் மேனகாவை தெரியுமா... தெரியாதா...?''

''தெரியாது ஸார்...''

''கதிர்வேல்...''

''ஸார்...''

''இவங்க ரெண்டு பேரையும் ஜீப்ல ஏத்தி ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் லாக்கப்புல உட்கார வையுங்க. உடம்புல துணி இருக்கக்கூடாது.''

பூபாலும் மோகனும் பதட்டமாய் குறுக்கிட்டார்கள்.

''ஸ்டேஷனுக்கெல்லாம் எங்களைக் கொண்டு

போகாதீங்க ஸார்..."

"அப்படீன்னா... உண்மையைச் சொல்லுங்க..."

பூபால் சில விநாடிகள் தயங்கிவிட்டு பின் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் கேட்ட கேள்வியில் நிலை குலைந்து போன பாட்ஷா எக்கச்சக்கமாய் பயந்தான். அவர் தன் கையில் வைத்திருந்த லாட்டியால் பாட்ஷாவின் தாடையை நிமிர்த்தி "ம்... சொல்லு" என்றார்.

பாட்ஷா அவஸ்தையாய் எச்சில் விழுங்கிவிட்டு தொடர்ந்தார்.

"ஸா... ஸார்... இந்த மோதிரத்தை நடேஷ்கிட்டயிருந்து நான் விலைக்கு வாங்கினேன்."

"மோதிரத்துல 'எம்'ன்னு போட்டிருக்கு. யார் இந்த எம்...?"

"எனக்குத் தெரியாது ஸார்..."

"பார்த்தியா மறுபடியும் பொய் சொல்ல ஆரம்பிச்சுட்டே... லாட்டியை நான் வீச ஆரம்பிச்சா உன்னோட மூஞ்சி ரத்தக் களறியாயிடும்."

பாட்ஷா கும்பிட்டான். "சத்தியமா எனக்குத் தெரியாது ஸார். நடேஷ் திடீர்ன்னு ஒருநாள் வந்து என்கிட்ட ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான். நான் இல்லேன்னு சொன்னேன். அதுக்கு அவன் 'சரி இந்த மோதிரத்தையாவது வித்து எனக்கு பணம் குடு'ன்னு சொன்னான். அதுக்கப்புறம் நானே ஆயிரத்து ஐநூறு ரூபாய் குடுத்து இந்த மோதிரத்தை வாங்கிக்கிட்டேன்."

"யார் இந்த 'எம்'ன்னு நீ கேட்கலையா?"

"கேட்டேன் ஸார்... அதுக்கு அவன் சிரிச்சுக்கிட்டே 'அது ஒரு மைனாவோட பேர்'ன்னு சொன்னான். நடேஷுக்கு நிறைய பெண் சகவாசம் உண்டு. அந்தப் பெண்கள்ல யாராவது ஒருத்தரோட மோதிரமாக இருக்கலாம்னு நினைச்சுக்கிட்டேன் ஸார்."

"நடேஷ்க்கு நெருங்கின தோஸ்த் யாரு...?"

"ஸார்... நடேஷ் எனக்கு ஃப்ரெண்டாக இருந்தாலும் மனசுவிட்டு பேசமாட்டான். இங்கே கடைக்கு வந்தாலும்



ஒரு அஞ்சு நிமிஷம்தான் இருப்பான். பான் வாங்கி போட்டுக்கிட்டு எதிர்த்த ப்ளாட்பாரத்துல இருக்கிற எஸ்.டி.டி. பூத்துக்குப் போய் யாருக்காவது போன் பண்ணி பேசிட்டு அப்படியே போயிடுவான்."

குணசேகர் எதிர் ப்ளாட்பாரத்தில் இருந்த எஸ்.டி.டி. பூத்தை பார்த்துக் கொண்டே கேட்டார்.

"நடேஷ் இங்கே வரும்போதெல்லாம் அந்த பூத்துக்கு போய் போன் பண்ணுவானா?"

"ஆமா... ஸார்...."

"பூத்தை நடத்தறது ஆணா... பெண்ணா?"

"பொண்ணு ஸார். உடல் ஊனமுற்ற பொண்ணு..."

"அடிக்கடி போன் பண்றதால அந்தப் பொண்ணுக்கு நடேஷை கண்டிப்பா தெரிஞ்சிருக்கும் இல்லையா?"

"ஆமா... ஸார்..."

"இந்த மோதிரம் கொஞ்ச நாளைக்கு என்கிட்ட இருக்கட்டும். விசாரணையெல்லாம் முடிஞ்ச பின்னாடி தர்றேன்."

கலக்கமாய் பாட்ஷா தலையாட்ட, குணசேகர் ரோட்டை க்ராஸ் செய்து எஸ்.டி.டி. பூத்தை நோக்கிப் போனார். போலியோவால் பாதிக்கப்பட்டிருந்த அந்தப் பெண் குணசேகரை சற்றே மிரட்சியோடு பார்த்தாள்.

ஒரே ஸ்டூலை இழுத்துப் போட்டுக்கொண்டு அவர்க்கு முன்பாய் உட்கார்ந்தார்.

"உம் பேர் என்னம்மா...?"

"ஹம்ஸவேணி..."

"அந்த பான்பீடா கடைக்கு வர்ற நடேஷ் இங்கே வந்துதான் யார்க்கோ போன் பண்ணுவானாமே உண்மையா...?"

"நடேஷ்...?"

குணசேகர் தன் கையில் இருந்த போட்டோவைக் காட்ட ஹம்ஸவேணி பார்த்துவிட்டுத் தலையசைத்தாள்.

"ஆமா...." கண்களில் இப்போது பெரிய அளவில் பயம்.

"நடேஷ் யார்க்கு போன் பண்ணுவான்னு தெரியுமா...?"

"நபர் யார்ன்னு தெரியாது ஸார். ஆனா அவர் எந்த நம்பருக்குப் போன் பண்ணுவார்ன்னு தெரியும்."

''நம்பர் என்ன சொல்லு...''

ஹம்ஸவேணி மேசையின் மேல் இருந்த நோட் புத்தகத்தைப் பிரித்து ஒவ்வொரு தேதியிலும் பதிவான டெலிபோன் எண்களை விரல் வைத்துப் பார்த்துவிட்டு பின் ஒரு டெலிபோன் நம்பரை பேப்பரில் குறித்துக் கொடுத்தாள். அதை வாங்கிப் பார்த்தவர் கேட்டார்.

''இந்த ஒரு நம்பர்க்குத்தான் போன் பண்ணுவாளா...?''

''ஆமா... ஸார்...''

குணசேகர் டெலிபோனை நகர்த்தி வைத்துக்கொண்டு ரிஸீவரை எடுத்தார். டயலில் எண்களைத் தட்டிவிட்டு டெலிபோன் எக்சேஞ்சை தொடர்பு கொண்டார்.

''எக்சேஞ்ச்...?''

''எஸ்...''

''இது போலீஸ் டிபார்ட்மெண்ட். ஒரு டெலிபோன் நம்பருக்கு அட்ரஸ் வேணும். குட் யூ ஹெல்ப் மீ...?''

''நம்பரைச் சொல்லுங்க ஸார்.''

சொன்னார்.

முப்பது விநாடி மௌனத்துக்குப் பிறகு டெலிபோன் எக்சேஞ்ச் அதிகாரியின் குரல் கேட்டது.

''ஸார்... இது எம்.எல்.ஏ. நவரத்தினத்தோட கெஸ்ட் ஹவுஸ் டெலிபோன் நம்பர்...''

கேஸ் விஸ்பரூபம் எடுத்துவிட்டதைச் சட்டென்று உணர்ந்தார் குணசேகர்.

# 9



இன்ஸ்பெக்டர் குணசேகர், நவரத்தினம் எம்.எல்.ஏ.வின் பங்களா போய்ச் சேர்ந்தபோது கோஷ்டி பூசலோடு கட்சி ஆட்கள் நிறைய பேர் வராந்தா நாற்காலிகளில் தோளில் போட்ட முழுத் துண்டுகளோடு காத்திருந்தார்கள்.

குணசேகரைப் பார்த்ததும் எம்.எல்.ஏ.வின் பி.ஏ. வேகமாய்ப்



பக்கத்தில் வந்தார்.

''என்ன இன்ஸ்பெக்டர்....?''

''எம்.எல்.ஏ.வைப் பார்த்து கொஞ்சம் பேச வேண்டியிருக்கு.''

''என்ன விஷயமாய்...?''

''ஸாரி... அதை அவர்கிட்டதான் சொல்லணும்.... உடனடியா சந்திக்க ஏற்பாடு பண்ணினா பரவாயில்லை.''

''அண்ணன் இன்னிக்கு கட்சியாட்களைப் பார்த்து சில முக்கியமான விஷயங்களைப் பேசறதுக்காகக் காத்திட்டிருக்கார்.''

''இதுகூட முக்கியமான விஷயம்தான். ஒரு பத்து நிமிஷம் அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்தாக்கூட போதும்.''

''ஒரு ரெண்டு நிமிஷம் அப்படி உட்கார்ந்து வெயிட் பண்ணுங்க. நான் உள்ளே போய் அண்ணன்கிட்ட கேட்டுட்டு வந்துடறேன்.''

குணசேகர் தலையசைத்துவிட்டு தனியாய்க் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்துகொண்டார். ஐந்து நிமிஷம் கழித்து பி.ஏ. பக்கத்தில் வந்தார்.

''அண்ணன் உள்ளே வெயிட் பண்ணிட்டிருக்கார். பேச வேண்டியதை சுருக்கமா பேசிட்டு வந்துடுங்க... அவரைப் பார்க்க நிறைய பேர் வெயிட் பண்ணிட்டிருக்காங்க.''

''எனக்கு சில நிமிஷங்கள் போதும். ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் க்ளியர் பண்ணிட்டு வந்துடுவேன்.''

குணசேகர் சொல்லிவிட்டு எம்.எல்.ஏ. நவரத்தினம் இருந்த அறைக்குள் நுழைந்தார்.

சிவப்பு நிற உல்லன் சால்வையைப் போர்த்திக் கொண்டு செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த நவரத்தினத்துக்கு நாற்பத்தைந்து வயது இருக்கலாம். ஹேர்டையின் உபயத்தில் கிருதாவும் மீசையும் அதிகப்படியான கறுப்பு நிறத்தோடு தெரிந்தன. தினமும் பீர் சாப்பிடும் பழக்கம் உண்டு என்பதை தொப்பை சொல்லியது. குணசேகரைப் பார்த்ததும் நவரத்தினம் செல்போனை அணைத்துவிட்டு ''வாங்க இன்ஸ்பெக்டர்...'' என்றார்.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும் ஸார்...."

"உட்காருங்க..."

உட்கார்ந்தார் குணசேகர். தயக்கமாக பேச்சைத் துவக்கினார்..

"ஸார்... ஒரு என்கொயரி..."

"சொல்லுங்க..."

"நடேஷ்ன்னு உங்களுக்கு யாரையாவது தெரியுமா?"

எம்.எல்.ஏ. தன் இடது கையின் ஆட்காட்டி விரலால் மூக்கு முனையைத் தேய்த்தார்.

"நடேஷா...? அந்தப் பேர்ல எனக்கு யாரும் தெரிஞ்ச மாதிரி இல்லையே... அந்த நடேஷ் என்ன அரசியல்வாதியா...?"

"கிடையாது ஸார்... அவன் ஒரு லோபர்."

"லோபரா...?"

"ஆமா ஸார்... உங்க கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு ஒரு டெலிபோன் பூத்திலிருந்து அடிக்கடி போன் பண்ணி பேசியிருக்கான்..."

"சரி... இப்ப எதுக்காக இந்த விசாரணை? அந்த நடேஷ் ஏதாவது தப்பு காரியம் பண்ணிட்டானா...?"

"அவனே இப்ப உயிரோடு இல்ல ஸார்..."

"என்னது...?"

"ஆமா ஸார்.." என்று ஆரம்பித்த குணசேகர் டாடாசுமோ கார் விபத்தைப் பற்றியும் அதில் இறந்து கிடந்த ஒரு பெண்ணைப் பற்றியும் போலீஸ் நாய் மூலம் மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த நடேஷ் உடலைக் கண்டெடுத்து அது சம்பந்தமாய் விசாரணை மேற்கொண்டதில் நடேஷ் அடிக்கடி எம்.எல்.ஏ. கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு போன் செய்ததாகத் தெரிய வந்தது பற்றியும் சொல்லி முடிக்க, நவரத்தினம் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டுக் கேட்டார்.

"இந்த நியூஸ் பத்திரிகைகளுக்கு போயிடலையே?"

"இன்னும் இல்ல ஸார்..."

"இன்ஸ்பெக்டர்...! அந்த கெஸ்ட் ஹவுஸ் என்னோடது தான்னாலும் இப்போதைக்கு அதை முழுக்க முழுக்க உபயோகப்படுத்தறது என்னோட தம்பி ஜீவரத்தினம்தான். நான் அந்த கெஸ்ட் ஹவுஸ் பக்கம் போயே கிட்டத்தட்ட



ஒரு வருஷமாச்சு..."

"அப்படீன்னா இப்போ அந்த பங்களாவில் இருக்கிறது உங்க தம்பி ஜீவரத்தினம் மட்டும்தான்.... இல்லையா?"

"ஆமா...! நீங்க சொல்றதைப் பார்த்தா இந்த நடேஷுக்கும் என்னோட தம்பிக்கும் இடையில் தொடர்பு இருக்குன்னு தெரியுது..."

"உங்க தம்பியை உடனடியா விசாரிக்கணும் ஸார்..."

"போன் பண்ணி வரவழைக்கட்டுமா?"

"வேண்டாம் ஸார்...! நேரிடையாகவே நான் கெஸ்ட் ஹவுஸுக்குப் போய் என்கொயரி பண்ணிட்டு வந்துடறேன்... அதுக்கு உங்க பர்மிஷன் வேணும்.."

"இதுக்கு என்னோட பர்மிஷனே வேண்டியது இல்லை. போலீஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியது எல்லோருக்கும் உள்ள கடமை. ஒரு கால்மணி நேரம் வெயிட் பண்ணுங்க. நானும் உங்ககூட வந்துடறேன். அவன் பேர்ல ஏதாவது குற்றம் இருந்தா உடனடியா நீங்க அவனை அரெஸ்ட் பண்ணலாம்..."

"தேங்க்யூ ஸார்... உங்க ப்ரதரை விசாரணை பண்ணும்போது நீங்களும் பக்கத்துல இருக்கிறது நல்லதுதான். உங்களுக்காக நான் வெளியே வெயிட் பண்றேன் ஸார்."

குணசேகர் எழுந்து வெளியே வந்து ஒரு நாற்காலிக்கு உடம்பைக் கொடுத்து காத்திருக்க, எம் எல்.ஏ. இருபது நிமிஷத்தில் எல்லாக் கட்சிக்காரர்களையும் உள்ளே அழைத்துப் பேசிவிட்டு வெளியே வந்தார்.

"வாங்க... இன்ஸ்பெக்டர்... போலாம். ஜீப் இங்கேயே இருக்கட்டும். நாம கார்லேயே போய்ட்டு வந்துடுவோம்."

காரில் புறப்பட்டார்கள்.

கிட்டத்தட்ட ஒரு மணிநேர பயணத்துக்குப் பின் திருவான்மியூர் கோடியில் இருந்த அந்த கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு முன்பாய் கார் வந்து நின்று ஹாரன் கொடுத்தது.

வாட்ச்மேன் கிழவன் காம்பௌண்ட் கேட்டின் விக்கெட் டோரில் எட்டிப் பார்த்து அவசர அவசரமாய் கதவை விரிய திறந்து வைத்தான்.

கார் மெதுவாய் ஊர்ந்து போர்டிகோவில் போய் நின்றது.

இன்ஸ்பெக்டர் குணசேகரும் எம்.எல்.ஏ.வும் காரிலிருந்து இறங்கி உள்ளே நுழைய, வேலையாள் ஒருவன் ஓடி வந்து கும்பிட்டு மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டான்.

எம்.எல்.ஏ. கேட்டார்.

''என்ன நாகப்பா... நல்லாயிருக்கியா?''

''உங்க புண்ணியத்துல நல்லா இருக்கேன்யா...''

''தம்பி உள்ளே இருக்கானா?''

''உள்ளேதான் இருக்காருங்க...''

''என்ன பண்ணிட்டிருக்கான்...?''

''தூங்கிட்டிருக்காங்க....''

''குடிச்சுட்டா.... இல்ல குடிக்காமலா?''

''தெரியலிங்கய்யா...''

''சரி... அந்த லான்ல ரண்டு நாற்காலியை எடுத்து போட்டுட்டு அவனைப் போய் எழுப்பி கூட்டிட்டு வா. இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறதா சொல்லாதே...''

''சரிங்கய்யா...'' வேலையாள் இரண்டு நாற்காலிகளை எடுத்து வெளியே போட்டுவிட்டு உள்ளே போனான். மாடிப் படிகளில் ஏறி வராந்தாவில் இருந்த முதல் அறைக்குள் நுழைந்தான். கிட்டத்தட்ட எம். எல். ஏ. வின் சாயலில் இருந்த ஜீவரத்தினம் ஒருக்களித்து படுத்திருக்க, வேலையாள் பக்கத்தில் போய் குரல் கொடுத்தான்.

''அய்யா...''

''.........''

''பெரியய்யா வந்து இருக்காங்க. உங்களை உடனடியா கீழே வரச்சொன்னாங்க...''

''......''

ஜீவரத்தினத்திடமிருந்து எந்தப் பதிலும் வராமல் போகவே கட்டிலைச் சுற்றிக் கொண்டு அவர்க்கு பக்கமாய் போய் நின்றான்.

''அ... ய்... யா...!'' கூப்பிட முயன்று ஜீவரத்தினத்தின் முகத்தைப் பார்த்தவன் திடுக்கிட்டான்.

ஜீவரத்தினத்தின் முகம் ரத்தக்களரியாய் மாறியிருக்க கட்டிலுக்கடியில் ஒரு ரத்தக் குளம் தேங்கியிருந்தது.

இன்ஸ்பெக்டர் பராந்தகன் உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டிருக்க, பூபால் சொல்லிக் கொண்டிருந்தான்.



''ஸார்... அந்த மேனகா ஒரு நர்ஸ். மது நர்ஸிங் ஹோமில் வேலை பார்த்திட்டிருக்கா. தேவேந்திரன் அங்கே ஒரு ட்ரீட்மெண்ட்டுக்காக போனபோது ரெண்டு பேர்க்கும் பழக்கம் ஏற்பட்டு அது காதலா மாறியது.''

பூபால் பேச்சை நிறுத்த மோகன் தொடர்ந்தான்.

''ஸார்... தேவேந்திரன் ஆரம்பத்துல அந்தப் பெண் மேனகாவை உண்மையாவும் தீவிரமாவும் காதலித்தான். ஆனா போகப் போக அவ மேல அவனுக்கு இருந்த நாட்டம் குறைஞ்சு போய் அவளை ஒரு தடவை தொட்டுப் பார்த்துட்டு கழற்றிவிட்டுவிட முடிவு பண்ணினான். நாங்க அது பாவம்ன்னு சொன்னோம். அவன் கேட்கலை. மேனகாவை கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்கிறதாக சொல்லி ஆசை வார்த்தை காட்டி அவ உடம்பைத் தொட்டான் தேவேந்திரன். அதுக்கப்புறம் அவங்க ரெண்டு பேர்க்கும் மத்தியில் என்ன நடந்ததுன்னு எங்களுக்குத் தெரியாது. தேவேந்திரன் தனக்கு கல்யாணம்ன்னு சொல்லி கல்யாணப் பத்திரிகையைக் கொண்டு வந்து கொடுத்தபோது மேனகாவைப் பத்தி அவன் கிட்ட கேட்டோம்.''

''அதுக்கு அவன் என்ன சொன்னான்...?''

''ரெண்டு தடவை அவ வயித்தை கழுவ வெச்சேன். கடைசியாக அவளையே கை கழுவிட்டேன்னு சொன்னான்.''

இன்ஸ்பெக்டர் பராந்தகனுக்குப் பக்கத்தில் நின்றிருந்த பத்திரிகை ரிப்போர்ட்டர் நிவேதிதா உஷ்ணப் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றிவிட்டு சொன்னாள்.

''கொலைக்கான மோட்டீவ் இப்பதான் தெரியுது ஸார். ஒரு பெண்புலி சீறியிருக்கிறது.''

''பட்... நிவேதிதா! கொலையாளி ஒரு ஆண்... இன்ஸ்பெக்டர் கிஷோர் அவனைப் பார்த்திருக்கார். சண்டை போட்டிருக்கார்.''

''மே...பி...! மேனகாவுக்கு தேவேந்திரன் செய்த துரோகத்தை பொறுத்துக்க முடியாத யாரோ அதாவது அவளுக்கு வேண்டிய யாரோ கொலையைப் பண்ணியிருக்கலாமே!''

''அதுக்குப் பதில் மேனகாவை விசாரிச்சாத்தான்

கிடைக்கும்..."

"எஸ்..."

"மேனகா வேலை பார்க்கும் நர்ஸிங் ஹோம் எங்கே இருக்கு?"

"கிண்டி பார்க் ரோட்டில்" பூபால் சொல்ல பராந்தகன் நிவேதிதாவோடு ஜீப்புக்கு வந்தார்.

ஜீப் புறப்பட்டது. பராந்தகன் உற்சாகமாய் சிரித்தார்.

"நிவேதிதா...! இந்த கேஸ்ல இந்தனை அலைச்சலுக்குப் பிறகு இப்பத்தான் மேனகாங்கிற வெளிச்சம் அடிச்சிருக்கு. தப்பிப்போன கைதிக்கும் தேவேந்திரன் கொலைக்கும் எந்த சம்பந்தமும் இருக்காதுன்னு இப்ப தெரியுது..."

"அப்படி சொல்லிட முடியாது ஸார். அவன் கைக்கு கிடைச்ச பின்னாடிதான் அந்த உண்மையும் தெரிய வரும்."

ஜீப் போக்குவரத்தில் கலந்து கிண்டி பார்க் ரோட்டைத் தொட்டு ஒரு குறுக்குத் தெருவில் இருந்த மது நர்ஸிங் ஹோமுக்கு முன்பாய் போய் நின்றது.

இருவரும் உள்ளே போனார்கள்.

ரிசப்ஷன் கௌண்டரில் இருந்த பெண் பராந்தகனின் போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் லேசாய் மிரண்டு போய் எழுந்து நின்றாள்.

"நர்ஸ் மேனகா இருக்காங்களா?"

"இருக்காங்க..."

"அவங்களைப் பார்க்கணும்."

ரிசப்ஷனிஸ்ட் உடனே இண்டர்காமில் தொடர்பு கொண்டாள்.

"லேபர் வார்டா...? மேனகாவை உடனே ரிசப்ஷனுக்கு வரச்சொல்லுங்க. அவங்களைப் பார்த்து பேசறதுக்காக இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வந்திருக்கார்."

"........"

"சரி..." ரிஸீவரை வைத்த ரிசப்ஷனிஸ்ட் பராந்தகனை ஏறிட்டாள்.

"மேனகா இப்ப வந்துடுவாங்க ஸார்."

பராந்தகனும் நிவேதிதாவும் வராந்தாவின் மேல் விழிகளை வைத்து மேனகாவுக்காக காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

..........

# 10



இன்ஸ்பெக்டர் பராந்தகனும் ப்ராஸிக்யூட்டர் நிவேதிதாவும் ஹாஸ்பிட்டல் வராந்தாவின் மேல் விழிகளை வைத்து மேனகாவுக்காக காத்திருக்க அவள் ஐந்து நிமிஷ அவகாசத்துக்குப் பிறகு வேக வேகமாய் வந்தாள். நெற்றியில் வியர்வை மின்னியது.

ஹாஸ்பிட்டல் ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள்.

"ஸார்... ஷி... ஈஸ்... மேனகா..."

பராந்தகன் அவளை நெருங்கினார். "ஸாரி சிஸ்டர்... ட்யூட்டி நேரத்துல வந்து உங்களுக்கு தொல்லை தர்றதுக்காக மன்னிக்கணும்."

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்... என்ன விஷயம்?"

"ஒரு என்கொயரி..."

"எது சம்பந்தமாய்...?"

"உங்களுக்கு தேவேந்திரனைத் தெரியுமா...?"

மேனகா நெற்றியைச் சுருக்கினாள்.

"தேவேந்திரன்...?"

"எஸ்..."

"அப்படி யாரையும் எனக்குத் தெரியாதே?"

"பொய் சொல்லாதீங்க சிஸ்டர். நேத்து ராத்திரி நீங்க தேவேந்திரனுக்கு போன் பண்ணிப் பேசிய விஷயம் வெளியே வந்தாச்சு. எதையும் மறைக்காமே உண்மையைச் சொல்லிடறது பெட்டர்."

"ஸாரி இன்ஸ்பெக்டர்! நீங்க தப்பான இடத்துக்கு வந்து என்கொயர் பண்ணிட்டிருக்கீங்க. நீங்க சொல்ற மாதிரி எனக்கு எந்த தேவேந்திரனையும் தெரியாது."

இன்ஸ்பெக்டர் பராந்தகன் தன் சர்ட் பாக்கெட்டில் வைத்து இருந்த தேவேந்திரனின் போட்டோவை

எடுத்துக்காட்டினார்.

''இவரை உங்களுக்குத் தெரியாதா?''

மேனகா பார்த்துவிட்டு தலையசைத்தாள்.

''தெரியாது...''

''என்ன சிஸ்டர் இது... நீங்களும் தேவேந்திரனும் ஒருத்தரையொருத்தர் விரும்பிட்டிருந்ததா அவரோட ஃப்ரண்ட்ஸ் சொல்லித்தான் நாங்க இங்கே வந்தோம். உங்க பேர் மேனகா தானே?''

''ஆமா...''

''இங்கே இதே மேனகா பேர்ல லேடி யாராவது நர்ஸாக வேலை பார்க்கிறாங்களா...?''

பராந்தகன் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே ரிசப்ஷன் கௌண்டரில் இருந்த பெண் சட்டென்று நிமிர்ந்தாள்.

''ஸார்... யூ... ஆர் கரெக்ட்...! இந்த மேனகா இங்கே வேலை பார்க்கிறதுக்கு முந்தி வேற ஒரு மேனகா இங்கே வேலை பார்த்துட்டிருந்தாங்க. அவங்க மார்ச் முப்பத்தி ஒண்ணாம் தேதி வேலையிலிருந்து ரிலீவாகிப் போய்ட்டாங்க. நீங்க சொல்ற மேனகாவும் அந்த தேவேந்திரனும் தான் காதலர்களா இருந்து இருக்கணும்...''

''அந்த மேனகா இப்போ எங்கே...?''

''பெங்களூர்ல இருக்கிற ஒரு பெரிய ஹாஸ்பிட்டல்ல வேலை கிடைச்சு போய்ட்டதா நான் கேள்விப்பட்டேன் ஸார்...''

''ஹாஸ்பிட்டல் பேர் தெரியுமா?''

''ஒரு நிமிஷம் இருங்க ஸார். அந்த மேனகாவோடு கொஞ்சம் நெருக்கமாயிருந்த பொண்ணு ஒருத்தி இதே ஹாஸ்பிட்டல்ல வேலை பார்க்கிறா. அவளைக் கூப்பிட்டு விடறேன்.''

சொன்ன ரிசப்ஷனிஸ்ட், இண்டர்காம் ரிஸீவரை எடுத்துக் கொண்டு யாருடனோ பேச அடுத்த சில விநாடிகளில் மாநிறமாய் - திருத்தமாய் நர்ஸ் யூனிஃபார்மில் ஒரு பெண் வந்தாள்.

''ஸார்...! இவ ஆரோக்கியமேரி. நீங்க கேட்கிற மேனகாவைப் பத்தி இவளுக்குத் தெரியும்.''

பராந்தகன் அந்த ஆரோக்கியமேரியை ஏறிட்டபடி



கேட்டார்.

''மேனகா... பெங்களூர்ல எந்த ஹாஸ்பிட்டல்ல வேலை பார்க்கிறான்னு தெரியுமா...?''

''தெரியும் ஸார்.''

''எங்கே...?''

''பட்டேல் ஹாஸ்பிட்டல்.''

''எந்த ஏரியா...?''

''வில்ஸன் கார்டன்.''

''மேனகா பெங்களூர் போய் அந்த பட்டேல் ஹாஸ்பிட்டல்ல ஜாய்ன் பண்ணின பிறகு சென்னைக்கு வந்து உங்களைப் பார்த்தாங்களா?...''

''இல்ல ஸார்... மேனகா பெங்களூர் போனதிலிருந்து அவளுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமே போயிடுச்சு. அவ ஒரு லெட்டர் கூட போடலை. அவ லெட்டர் போடாததினால அந்த கோபத்துல நானும் லெட்டர் போடாமே இருந்துட்டேன்...''

''மேனகாவும், தேவேந்திரனும் லவ்வர்ஸ் என்கிற விஷயம் உங்களுக்குத் தெரியுமா...?''

''பேரெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனா மேனகா யாரையோ காதலிக்கிறாங்கிற விஷயம் மட்டும் எனக்குத் தெரியும். மேனகா ஒரு மூடி டைப். சில விஷயங்களை சொல்லுவா. சில விஷயங்களைப் பத்தி மூச்சே காட்ட மாட்டா.''

''பெங்களூர் பட்டேல் ஹாஸ்பிட்டல் போன் நம்பர் தெரியுமா...?''

''தெரியாது ஸார்...''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்த ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா குறுக்கிட்டாள்.

''ஸார்... டெலிபோன் எக்சேஞ்சை காண்டாக்ட் பண்ணி இன்ஃபர்மேஷன்ல கேட்டா பெங்களூர் பட்டேல் ஹாஸ்பிட்டல் போன் நம்பர் கிடைக்கும்.''

''நீயே ட்ரை பண்ணு நிவேதிதா'' பராந்தகன் சொல்லவும் நிவேதிதா ரிசப்ஷனிஸ்ட்டின் அனுமதியைப் பெற்று, டெலிபோனை உபயோகித்து, எக்சேஞ்சை தொடர்பு கொண்டு ஸ்பெஷல் இன்ஃபர்மேஷனில் பெங்களூர் பட்டேல் ஹாஸ்பிட்டலின் டெலிபோன்

நம்பரை வாங்கினாள். பராந்தகன் எஸ்.டி.டி. மூலம் ஹாஸ்பிட்டலின் சீஃப்டாக்டரை தொடர்பு கொண்டார். ஆங்கிலத்தில் பேசினார்.

''டாக்டர்...! நாங்கள் சென்னை போலீஸ். இங்கே நடந்த ஒரு கொலை சம்பந்தமாக ஒரு தகவல் வேண்டும்.''

''கேளுங்கள்...''

''மேனகா என்கிற பெயரில் உங்கள் ஹாஸ்பிடலில் ஒரு நர்ஸ் பணிபுரிந்து கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணிடம் நாங்கள் பேச வேண்டியுள்ளது...''

''பெயர் என்ன சொன்னீர்கள்.?''

''மேனகா...''

''நீங்கள் சொன்ன அந்தப் பெயரில் இந்த ஹாஸ்பிட்டலில் யாரும் பணிபுரியவில்லையே...?''

''டாக்டர்! அந்த மேனகா உங்கள் ஹாஸ்பிட்டலில் வேலைக்கு சேர்ந்து ஒரு மாதகாலம்தான் ஆகியுள்ளது. மார்ச் முப்பத்தி ஒன்றாம் தேதி சென்னையில் இருக்கிற மது நர்ஸிங்ஹோமிலிருந்து ரிலீவாகி ஏப்ரல் முதல் தேதி உங்கள் ஹாஸ்பிட்டலில் பணிக்குச் சேர்ந்து இருக்கிறாள்.''

''வெரி ஸாரி டூ ஸே...திஸ்...! கடந்த ஆறு மாத காலத்தில் எந்த ஒரு புது நர்ஸையும் நாங்கள் அப்பாய்ண்ட் செய்யவில்லை. உங்களுக்கு யாரோ தப்பான தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள்...''

''டாக்டர்...ஆர்...யூ...ஷ்யூர்...?''

''சர்ட்டன்லி. எங்கள் ஹாஸ்பிட்டலில் இப்போது எழுபத்திரண்டு நர்ஸ் பணியாளர்கள் மூன்று ஷிஃப்ட்க ளில் மாறி மாறி பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த எழுபத்திரண்டு பேர்களில் மேனகா என்ற பெயரில் யாரும் இல்லை.''

''மன்னிக்க வேண்டும் டாக்டர். இன்னும் ஒரு பதினைந்து நிமிஷம் கழித்து மறுபடியும் உங்களுக்கு டெலிபோன் செய்கிறேன். வெரிஃபை செய்து வைத்துக் கொள்ளுங்கள்.'' பராந்தகன் ரிஸீவரை வைத்துவிட்டு நர்ஸ் ஆரோக்கியமேரியிடம் திரும்பினார்.

''நீங்க சொன்ன ஹாஸ்பிட்டலில் நர்ஸ் மேனகா வேலை பார்க்கலையாமே...?''



''அதைப்பத்தி எனக்கு எதுவும் தெரியாது ஸார். மேனகா கையில் பட்டேல் ஹாஸ்பிட்டலோட அப்பாய்ண்ட் மெண்ட் ஆர்டர் இருந்ததை நான் பார்த்தேன்...''

பராந்தகனுக்கு பி.பி. இல்லாமலேயே தலையைச் சுற்றியது.

ஜீவரத்தினத்தின் முகம் முழுவதும் முள்கரண்டியால் குத்தப்பட்ட மாதிரி ரத்தக்களறியாய் தெரிய கட்டிலின் தலைமாட்டில் சின்னதாய் ஒரு ரத்தக் குளம் தேங்கி உறைந்து போயிருந்தது.

எம்.எல்.ஏ. நவரத்தினம் அழுது நனைந்த விழிகளோடு நாற்காலிக்கு தளர்வாய் உடம்பைக் கொடுத்து, போலீஸ் சம்பிரதாயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் கெஸ்ட் ஹவுஸ் வேலையாள் நாகப்பாவை கேள்விகளால் பதம் பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்ன நடந்தது... உண்மையைச் சொல்லிடு. உனக்குத் தெரியாமே இந்த பங்களாவுக்குள்ளே யாரும் வந்து இருக்க முடியாது...''

வேலையாள் நாகப்பா அழுகை வெடிக்கும் குரலோடு மண்டியிட்டான்.

''அய்யா...எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்கய்யா. ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி கூட அய்யா மாடியிலிருந்து குரல் கொடுத்தார். போனேன். தலைவலியா இருக்கு. மாத்திரையும் காபியும் கொண்டுவான்னு சொன்னார். கொண்டு போனேன். சாப்பிட்டு படுத்துக்கிட்டார். அதுக்கப்பறம் நீங்க வந்த பின்னதான் மாடிக்குப் போனேன்...''

''அதுக்கப்புறம் யாராவது ஜீவரத்தினத்தைப் பார்க்க வந்தாங்களா...?''

''யாரும் வரல்லீங்கய்யா...''

''நீ இதே பங்களாவில்தான் இருந்தியா... இல்ல... வெளியே போயிருந்தியா...?''

''நான் எதுக்குங்கய்யா வெளியே போறேன்...! இருபத்தி நாலு மணி நேரமும் இங்கேயேதான் விழுந்து கிடப்பேன்.''

''யாரும் வரலைன்னு சொல்றே... சரி...! போன்ல யாராவது கூப்பிட்டாங்களா...?''

நாகப்பா யோசித்துவிட்டு தலையாட்டினான். ''ஆமாங்கய்யா! சின்னையா தலைவலி மாத்திரையும் காபியும்சாப்பிட்டுபடுத்தஉடனேயேரெண்டுபேர்போன் பண்ணியிருந்தாங்க...''

''யார் அவங்க...?''

''இருங்கய்யா... நோட்புக்ல பேர் எழுதி வெச்சிருக்கேன்.''

நாகப்பா கீழே இறங்கிப்போய் ஒரு நோட்புக்கோடு வந்தான். குணசேகரிடம் நீட்ட அதை அவர் வாங்கிப் பிரித்தார்.

தேதி வாரியாக போன் செய்தவர்களின் பெயர்கள் பால்பாயிண்ட் பேனாவில் கொட்டை கொட்டையாய் எழுதப்பட்டிருந்தது.

தேதி வாரியாய் பெயர்கள்.

மே மாத முதல் தேதிக்கு பார்வையைக் கொண்டு போனார்.

போன் செய்த இரண்டு பேர்களின் பெயர்களும் தெரிந்தன.

1. மல்லிகை மன்னன்
2. மேனகா.

# 11



இன்ஸ்பெக்டர் குணசேகர் நோட்புக்கில் எழுதியிருந்த அந்தப் பெயர்களைவாய்விட்டுப் படித்தார்.

''மல்லிகை மன்னன், மேனகா!'' திரும்பி எம்.எல்.ஏ. நவரத்தினத்திடம் கேட்டார்.

''ஸார்...! இவங்க யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா...?''

நவரத்தினம் தலையை அசைத்தார். ''மல்லிகை மன்னனைத் தெரியும். அவர் ஒரு மேடைப் பேச்சாளர்.



ஜீவரத்தினத்தைப் பார்க்க அடிக்கடி வர்றதுண்டு.''

''இந்த மேனகா...?''

''இது யார்ன்னு தெரியலை.''

குணசேகர், வேலையாள் நாகப்பாவிடம் திரும்பினார். ''இவங்க ரெண்டு பேரும் போன்ல என்ன சொன்னாங்க...?''

''ஜீவரத்தினம் ஐயாகிட்ட பேசணும்னு சொன்னாங்க... அவர் படுத்து தூங்கிட்டிருக்கார்னு சொன்னதுமே ரிஸீவரை வெச்சுட்டாங்க.''

''வேற எதுவுமே பேசலையா...?''

''அந்தப் பொண்ணு கொஞ்சம் யோசிச்சு 'வீட்ல யாரெல்லாம் இருக்காங்'கன்னு கேட்டுச்சு, 'அய்யா வெளியூர் போவாரா'ன்னு கேட்டு, நான் இல்லேன்னு சொன்னதும் ரிஸீவரை வெச்சுடுச்சு...''

''அந்தப் பொண்ணு மேனகா எந்த போன் நெம்பரிலிருந்து பேசிட்டிருக்கான்னு நீ கேட்கலியா?''

''இல்லீங்கய்யா.''

''ஏன்...?''

''போன்ல பேசறவங்ககிட்ட அது மாதிரி கேள்வியெல்லாம் கேட்டா அய்யாவுக்கு பிடிக்காதுங்கய்யா...''

''இந்த மேனகா இதுக்கு முந்தி எப்பவாவது போன் பண்ணியிருக்காளா?''

''இல்லீங்கய்யா.''

இன்ஸ்பெக்டர் குணசேகர் தலையில் இருந்த தொப்பியைக்கழற்றிவிட்டு நெற்றியை அவஸ்தையாய் கீறிக்கொண்டார்.

'யார் இந்த மேனகா...?'

குழப்ப விநாடிகளில் அவர் தத்தளித்துக் கொண்டிருக்க டெலிபோன் 'விருட்'டென்று கதற ஆரம்பித்தது. எம்.எல்.ஏ., நவரத்தினம் ரிஸீவரை எடுப்பதற்காக நகர முயல குணசேகர் குறுக்கிட்டார்.

''ஒரு நிமிஷம் ஸார்...''

அவர் நின்றார்.

''என்ன இன்ஸ்பெக்டர்...?''

''இப்ப போன் பண்றது யார்ன்னு நமக்குத் தெரியாது. நீங்களும் ஜீவரத்தினமும் பாதர்ஸ், ஸோ குரலோட

தொனியும் ஒரே மாதிரி, இருக்க வாய்ப்பு அதிகம். நீங்க ரிஸீவரை எடுத்து பேசும்போது உங்க ப்ரதர் ஜீவரத்தினம் மாதிரியே பேசுங்க. நான் கீழே ஹாலில் இருக்கிற போனுக்குப் போய் ஹியர் பண்றேன்..."

எம்.எல்.ஏ. தலையசைக்க குணசேகர் ஹாலை நோக்கி வேக வேகமாய்ப் போய் அங்கிருந்த டெலிபோன் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

நவரத்தினம் "ஹலோ" சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஹலோ..."

மறுமுனையில் பதட்டமாய் குரல் கேட்டது.

"ஹலோ... யார் பேசறது... ஜீவரத்தினமா?"

"ஆமா..."

"நான் மல்லிகை மன்னன்... நீ இப்பத்தான் தூங்கி எந்திரிச்சியா?"

"ஆமா... கொஞ்சம் தலைவலி... ஒரு மாத்திரை சாப்பிட்டு தூக்கம் போட்டு எந்திரிச்சேன். ஆமா... என்ன விஷயம்... திடீர் போன்... குரல் வேற டென்ஷனா இருக்கு...?"

"டென்ஷன்ல இருந்துக்கிட்டிருக்கேன் நான்."

"விஷயத்தைச் சொல்லு."

"தேவேந்திரனோட கதையை யாரோ முடிச்சுட்டாங்க தெரியுமில்ல...?"

"தெரியும்..."

"உனக்கு பயம் வரலையா...?"

"எதுக்கு பயம்...?"

"சரியா போச்சு... போன்ல எதையும் சொல்லிட்டிருக்க முடியாது. நான் நேர்ல வர்றேன். நீயும் நானும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்க வேண்டிய நிமிஷங்கள் இது... நான் வரட்டுமா... வேண்டாமா...?"

"சரி... நீ உடனே நம்ம கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு புறப்பட்டு வா..."

நவரத்தினம் ரிஸீவரை வைத்தார். குணசேகர் வேக வேகமாய் மாடியேறி வந்தார். பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்து இருந்த நவரத்தினத்துக்கு முன்பாய் வந்தார்.

"ஸார்...! மல்லிகை மன்னன் சொன்னதைக் கேட்டீங்களா...?"



"ம்... கேட்டேன்... தேவேந்திரன் கதையை யாரோ முடிச்சுட்டாங்கன்னு மல்லிகை மன்னன் சொன்னார். யார் அந்த தேவேந்திரன்...?"

"அன்னிக்கு அதிகாலையில் ஒரு கல்யாண மண்டபத்தில் கல்யாண மாப்பிள்ளை ஒருத்தர் கொலை செய்யப்பட்டதா போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்கு தகவல் கிடைச்சுது. அந்த கேஸை இன்ஸ்பெக்டர் பராந்தகன் இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருந்தார். அவரை கன்ஸல்ட் பண்ணினால் இது சம்பந்தமாய் வேறு ஏதாவது தகவல் கிடைக்கலாம்."

"மல்லிகை மன்னன் இங்கே இப்போ வர்றதாக சொல்லியிருக்கார். அவர் வரட்டும். என்னோட ப்ரதர் ஜீவரத்தினம் கொலை செய்யப்பட்டதுக்கான காரணம், கொலை செஞ்ச நபர் யார்ங்கிற விபரமும் அவர்க்கு தெரிஞ்சிருக்கலாம்..."

இருவரும் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

இன்ஸ்பெக்டர் பராந்தகன் பதினைந்து நிமிஷம் கழித்து மறுபடியும், பெங்களூரில் இருந்த பட்டேல் ஹாஸ்பிட்டலைத் தொடர்பு கொண்டார். சீஃப் டாக்டரிடம் பேசினார்.

"டாக்டர்... அந்த மேனகாவைப் பற்றி என்கொயர் செய்து பார்த்தீர்களா...?"

டாக்டர் சொன்னார். "என்கொயரி செய்தேன். மேனகா என்கிற பெண்ணுக்கு எங்கள் ஹாஸ்பிட்டலில் நர்ஸ் வேலைக்கு சேர அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பியிருந்தோம். ஆனால், அந்தப் பெண் மேனகா வேலைக்கு வந்து சேரவில்லை. அப்படி சேராததற்கு காரணம் தெரிவித்து கடிதமும் எழுதவில்லை..."

பராந்தகன் திடுக்கிட்டார்.

"டாக்டர்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? மேனகா உங்கள் ஹாஸ்பிட்டலில் வேலைக்கு வந்து சேரவில்லையா?"

"ஆமாம்..."

பராந்தகன் ரிஸீவரை வைத்து விட்டு நர்ஸ் ஆரோக்கிய மேரியிடம் திரும்பினார்.

''சிஸ்டர்...! மேனகா பெங்களூருக்குப் போய் அந்த பட்டேல் ஹாஸ்பிட்டல்ல ஜாய்ன் பண்ணவே இல்லையாமே?''

''ஜாய்ன் பண்றதா தானே என்கிட்ட சொல்லிட்டு போனா! ஸார்... நடக்கிற சம்பவங்களைப் பார்த்தா மேனகாவுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலா மோன்னு என் மனசுக்குப்படுது. ஏன்னா அவ எங்கே இருந்தாலும் இத்தனை நாளா என்னை காண்டாக்ட் பண்ணாமே இருக்கமாட்டா. ஒரு லெட்டராவது போட்டிருப்பா...''

சில விநாடிகள் யோசனையாய் நெற்றியைத் தேய்த்த இன்ஸ்பெக்டர் பராந்தகன் நர்ஸ் ஆரோக்கியமேரியை ஏறிட்டார்.

''நீங்க இப்ப ஃப்ரீயா இருக்கீங்களா சிஸ்டர்?''

''ஃப்ரீதான்...''

''என்கூட ஜி.ஹெச். வரைக்கும் வரமுடியுமா?''

''எதுக்கு ஸார்...?''

''ஸ்பாட்ல ஆறுபேர் இறந்து போயிருக்காங்க. ஆனா அந்த இடத்துல ஆக்ஸிடெண்ட்டில் சிக்கி உயிரிழக் காமல் கொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணோட பாடி கிடைச்சது. பாடியோட முகம் குரூரமா சிதைக்கப்பட்டு இருந்ததால அடையாளம் தெரியாம போயிடுச்சு... என்னுடைய நண்பர் இன்ஸ்பெக்டர் குணசேகர்தான் அந்தப் பெண் சம்பந்தமா இன்வெஸ்டிகேட் பண்ணிட் டிருக்கார். நீங்க சொல்ற மேனகா ஒருவேளை அந்தப் பெண்ணாகக்கூட இருக்கலாம். வந்து பார்த்து ஐடெண்டிஃபை பண்ணினா பரவாயில்லை.''

ஆரோக்கியமேரி கண்ணீரோடு தலையாட்டினாள்.

''வர்றேன்ஸார்...''

புறப்பட்டார்கள்.

ஜீப் ஜி.ஹெச்சை நோக்கி பயணப்பட, ஆரோக்கிய மேரிக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா கேட்டாள்.



''ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்ல கொலை செய்யப்பட்டுக் கிடந்த பெண்ணோட முகம் அடையாளம் தெரியாத படிக்கு சிதைக்கப்பட்டிருக்கு... நீங்க எப்படி அடையாளம் கண்டுபிடிப்பீங்க சிஸ்டர்?''

ஆரோக்கியமேரி சொன்னாள்... குரல் தழுதழுக்க.

''மேனகா நல்ல நிறம். நல்ல உயரம். உடம்பைப் பார்த்தாலே தெரிஞ்சுடும். அதுவுமில்லாமே மேனகாவுக்கு இடது கணுக்காலில் நீளமா தீக்காயத் தழும்பு ஒண்ணு இருக்கும்.''

''மேனகாவோட ஃபேமிலியைப் பத்தி நீங்க சொல்லவேயில்லையே...?''

''அவ ஒரு ஆர்பன். சின்ன வயசிலேயே பேரண்ட்ஸை இழந்துட்டா. 'பெதேன்'ங்கிற ஒரு ஆர்பனேஜில்தான் அவ வளர்ந்தா... படிச்சா... அதுக்கப்புறம் நர்ஸ் கோர்ஸ்ல சேர்ந்தா.''

''வேலை செய்யும்போது மேனகா எங்கே தங்கியிருந்தா...?''

''நர்ஸ் ஹாஸ்டலில்...''

பேசிக்கொண்டே வந்ததில் ஜி.ஹெச். வந்திருக்க, ஜீப் உள்ளே போய் நின்றது.

பராந்தகன், நிவேதிதா, ஆரோக்கியமேரி மூன்று பேரும் இறங்கி ஹாஸ்பிட்டலில் மார்ச்சுவரி இருந்த திசையை நோக்கி நடந்தார்கள். வராந்தாவில் பாதி தூரத்தைக் கடந்து இருந்தபோது எஸ்.ஐ. ஒருவர் எதிர்ப்பட்டு பராந்தகனுக்கு சல்யூட் வைத்தார்.

''என்ன... பாலு...?''

''ஸார்...! தப்பிச்சுப்போன அந்தக் கைதி கனகு செங்கல்பட்டு போலீஸ்ல மாட்டிக்கிட்டான். இப்பத்தான் ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முன் தகவல் வந்தது ஸார்.''

''குட்... ஒரு பிரச்னை முடிஞ்சுது. இனிமே அவனைப் பத்தி கவலைப்பட்டுக்கிட்டு இருக்க வேண்டாம்.''

''ஸார்...! நான் செங்கல்பட்டுக்கு கிளம்பி போகட்டும்மா...?''

''நீங்க கிளம்புங்க! நான் இதை டீல் பண்ணிக்கிறேன்: மார்ச்சுவரி ரூம் பூட்டியிருக்கா?''

"திறந்திருக்கு ஸார்..."

பராந்தகன் நடந்தார். அவரைத் தொடர்ந்து நடந்த ஆரோக்கிய மேரிக்கு கால்கள் பின்னின.

'கடவுளே... மார்ச்சுவரியில இருக்கிற பாடி மேனகாவாய் இருக்கக் கூடாது...'

மானசீகமாய் சிலுவைக்குறி போட்டுக் கொண்டே நடந்தாள்.

மார்ச்சுவரி வந்தது.

காவலுக்கு இருந்த அட்டெண்டர் கதவைத் திறந்து விட்டு தள்ளி நிற்க, மூவரும் உள்ளே போனார்கள்.

தரை மேசைகளின் மேல் வரிசையாக உடல்கள். காற்றில் 'பார்மல் டி ஹைட்' நெடி.

பராந்தகன் ஓர் உடம்புக்கு முன்பாய் போய் நின்று அதன் மேல் பரவியிருந்த வெள்ளை விரிப்பை விலக்கினார்.

போஸ்ட்மார்ட்டம் செய்து முடிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் உடம்பு நீளமாய் நிறம் கன்றிப் போய்த் தெரிந்தது.

நிவேதிதா ஆரோக்கியமேரியைத் தொட்டாள். "பார்த்து சொல்லுங்க சிஸ்டர். இது மேனகாவா...?"

ஆரோக்கியமேரி தயக்கமாய் நடந்துபோய் உடலை வெகு கிட்டத்தில் பார்த்துவிட்டு இடது கணுக்காலைக் கவனித்தாள்.

இருதயம் உச்ச துடிப்புக்குப் போனது.

கணுக்காலில் அந்த தீக்காயத் தழும்பு இருந்தது. ஆரோக்கியமேரி இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு ஒரே அழுகைக்கு தயாராகி முதுகு குலுங்கினாள்.

"ஸ... ஸார்... ஷி... ஈஸ்... மேனகா..."

பராந்தகன் வியப்போடு நிவேதிதாவின் பக்கம் திரும்பினார்.

"இது மேனகா என்றால் நேற்று ராத்திரி கல்யாண மண்டபத்துக்கு போன் செய்து தேவேந்திரனோடு பேசிய மேனகா யார்...?"

"ஸார்... மறுபடியும் கேஸ் சிக்கலாயிடுச்சு. ஆரம்பத்திலிருந்து மறுபடியும் இதைக் கிளறிப்



பார்க்கணும்."

நிவேதிதா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மார்ச்சுவரியின் வாசலில் அந்த பூட்ஸ் சத்தம் கேட்டது.

பராந்தகன் திரும்பிப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் குணசேகர் உள்ளே வேகமாய் நுழைந்து கொண்டு இருந்தார்.

# 12



குணசேகர் உள்ளே நுழைய பராந்தகன் ஆர்வமாய் அவரை நோக்கிப் போனார்.

"வாங்க மிஸ்டர் குணசேகர்! நானே உங்களைப் பார்க்க வரலாம்ன்னு நினைச்சிட்டிருந்தேன்."

குணசேகர் புன்னகைத்தார். "உங்களைப் பார்த்து பேசறதுக்காக ஸ்டேஷனுக்குப் போனேன். நீங்க இங்கே வந்து இருக்கிறதாக ஸ்டேஷன் ரைட்டர் சொன்னார். இங்கேயே உங்களைப் பார்த்துப் பேசிடலாம்னு வந்தேன்..."

"என்ன விஷயம் சொல்லுங்க..."

"மிஸ்டர் பராந்தகன்! கல்யாண மண்டபத்துல நடந்த ஒரு கொலையை நீங்கதானே இன்வெஸ்டிகேட் பண்ணிட்டு வர்றீங்க...?"

"ஆமாம்..."

"அந்தக் கொலையைப் பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா...?"

"கொலை செய்யப்பட்ட நபரோட பெயர் தேவேந்திரன். கல்யாணமாப்பிள்ளை."

"அந்தக் கொலைக்கான காரணம் ஏதாவது தெரிஞ்சுதா...?"

"உறுதியா தெரியலை. பட் கொலை செய்யப்பட்ட தேவேந்திரன் மேனகாங்கிற ஒரு பொண்ணை லவ் பண்ணியிருக்கான். மேனகா ஒரு நர்ஸ். அந்தப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதா சொல்லி

ஏமாத்தியிருக்கான் தேவேந்திரன். தேவேந்திரனோட இந்தக் கொலைக்கு மேனகா காரணமாக இருந்து இருக்கலாமோ என்று நினைத்த நேரத்தில் மேனகாவே கொலை செய்யப்பட்டிருக்கிறாள் என்பது ஒரு அதிர்ச்சியான செய்தி. மேனகாவின் முகம் சிதைக்கப்பட்டு அடையாளம் தெரியாத நிலையில் இருந்தாலும் அது மேனகாதான்னு அடையாளம் காட்டியிருக்காங்க நர்ஸ் ஆரோக்கியமேரி. மேனகாவும் ஆரோக்கியமேரியும் தொழில் ரீதியா திக்கஸ்ட் ஃப்ரண்ட்ஸ். பாடியின் இடது கணுக்காலில் இருந்த ஒரு தீக்காயத் தழும்பை வெச்சு அது மேனகாதான்னு உறுதிப்படுத்தியிருக்காங்க..."

"நோ டவுட் மிஸ்டர் பராந்தகன்! ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டில் இருந்த அந்த டெட்பாடி மேனகாதான். அவளைக் கொலை பண்ணின நபர் இப்போ உயிரோடு இல்லேன்னாலும் அந்தக் கொலைக்கு ஒருவகையில் காரணகர்த்தாவான நபரைக் கைது பண்ணிட்டோம்..."

பராந்தகன் வியப்பாய் நிமிர்ந்தார். ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதாவும் வேகவேகமாய் பக்கத்தில் வந்தாள்.

"யாரு ஸார்... அது...?"

"அவர் பேரு மல்லிகை மன்னன். ஒரு மேடைப் பேச்சாளர். எம்.எல்.ஏ. நவரத்தினத்தோட் ப்ரதர் ஜீவரத்தினத்தோட ஃப்ரண்ட். ஜீவரத்தினம் இப்போ உயிரோட இல்லை. தேவேந்திரன் மாதிரியே அவரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்."

குணசேகர் சொல்லச் சொல்ல இடைமறித்துக் கேட்டார் பராந்தகன்.

"மேனகாவோட மரணத்துக்கு அந்த மல்லிகை மன்னனும் ஒரு காரணம்னு சொன்னீங்க. அது எப்படி மிஸ்டர் குணசேகர்...?"

"மேனகாவைப் பாழ் பண்ணினதுல மூணு பேரும் பார்ட்னர்ஸ். தேவேந்திரன் மொதல்ல மேனகா மேல உண்மையான காதலைத்தான் வெச்சிருந்தான். மேனகா ஒருநாள் ஜீவரத்தினம் கண்ணுல பட்டுட்டா. ஒரு பெரிய தொகைக்கு ஆசைப்பட்ட தேவேந்திரன் அந்தப் பணத்துக்காக மனசாட்சியை ஓரமா தள்ளி வெச்சுட்டு மேனகாவை தாரை வார்த்தான். பெங்களூருக்குப் போய்



நர்ஸ் வேலையில் ஜாய்ன் பண்ணவேண்டிய மேனகா ஜீவரத்தினத்தோட படுக்கையறைக்கு வந்தாள். ஏப்ரல் மாசம் முழுவதும் அந்த பங்களாவில் சிறை வைக்கப்பட்ட மேனகாவை மூணு பேருமே இஷ்டப்பட்ட நேரத்துக்குப் போய் அவளைத் தொட்டிருக்காங்க. இதுல நடேஷ்னு ஒருத்தன்... ஜீவரத்தினத்துக்கு கைத்தடியா இருந்தவன். ரெண்டு நாளைக்கு முன்னாடி ஜீவரத்தினத்தோட கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு வந்திருக்கிறான். ஜீவரத்தினம் குடி போதையில் இருந்ததை உபயோகப்படுத்திக்கிட்டு. மேனகா பூட்டப்பட்டிருந்த அறையைத் திறந்து அவளை ஃபோர்ஸ் பண்ணியிருக்கான்.

"அந்தப் போராட்டத்தில் மேனகா உயிரைவிட, விஷயம் ஜீவரத்தினத்துக்கு தெரிந்த அதே விநாடி நடேஷ் ஜீவரத்தினத்தால் மூர்க்கமாய் தாக்கி கொல்லப்பட்டான். ஒரே நேரத்துல ரெண்டு பாடி வீட்ல இருந்ததை ஜீரணிக்க முடியாத ஜீவரத்தினம் மல்லிகைமன்னனை உதவிக்குக் கூப்பிட்டு, ரெண்டு பாடியையும் டிஸ்போஸ் பண்ணச் சொல்லியிருக்கார். மல்லிகை மன்னனும் தன்னோட அரசியல் அடியாட்கள் உதவியோடு மேனகாவோட பாடியையும் நடேஷோட பாடியையும் டிஸ்போஸ் பண்ணியிருக்கார். நடேஷோட பாடியை கருவேலங்குப்பத்துக்குப் பக்கத்தில் இருக்கிற கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ணிட்டு மேனகாவோட பாடியை கருவேலங்குப்பம் வளைவுக்குக் கொண்டு வந்து முகத்தை சிதைச்சு அது யார்னு தெரியாமே இருக்கவும் கேஸை வேற பக்கம் திசை திருப்பறதுக்காகவும் மேனகாவோட உள்ளங்கையில் I Love You G.G.ன்னு பச்சை குத்தி, மரக்கிளையில் தொங்கவிட்டுட்டுப் போயிட்டாங்க. அவங்க அப்படி தொங்க விட்டுட்டுப் போன கொஞ்ச நேரத்துக்கு முன்னே ஒரு டாட்டா சுமோ அந்த மரத்துல மோதி விபத்துக்குள்ளாகியிருக்கு..."

"இந்த விபரங்களை உங்களுக்கு சொன்னது யார் ஸார்?" ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா கேட்டாள்.

"இது மல்லிகைமன்னனோட க்ளியர் ஸ்டேட்மெண்ட். மார்ச்சுவரியில் இருக்கிற மேனகாவின் பாடியை

அடையாளம் காட்றதுக்காக மல்லிகை மன்னனை போலீஸ் வேன்ல கொண்டு வந்துக்கிட்டு இருக்காங்க..."

"ஸார்! மேனகாவோட மரணத்துக்குக் காரணமான தேவேந்திரனும் ஜீவரத்தினமும் இன்னிக்கு ஒரே நாள்ல கொலை செய்யப்பட்டிருக்காங்க. காலையில் கல்யாண மண்டபத்தில் தேவேந்திரன்; சாயந்தரம் ஜீவரத்தினம். ஸோ மேனகாவுக்கு வேண்டிய யாரோ பழிக்குப் பழி வாங்கறதுக்காக இந்தக் கொலைகளைப் பண்ணியிருக்க லாம்ன்னு நினைக்கிறீங்களா...?"

"இப்படியும் இருக்கலாம். ஏன்னா தேவேந்திரனும் ஜீவரத்தினமும் கொலை செய்யப்படுவதற்கு முந்தி மேனகான்னு யாரோ போன் பண்ணியிருக்காங்க. உயிரோடு இல்லாத மேனகா எப்படி போன் பண்ணியிருக்க முடியும்?"

பராந்தகன் குணசேகரை ஏறிட்டார். "தேவேந்திரனை கொலை செய்தநபரை இன்ஸ்பெக்டர் கிஷோர் ஃபாலோ பண்ணிட்டு வந்து டெலிபோன் பூத்தில் மடக்கி சண்டையும் போட்டிருக்கார். கொலையாளி எதிர்பாராத விதமா அவரைத் தாக்கி காயப்படுத்தியதில், கிஷோர் சுயநினைவு இல்லாமே இப்போ ஹாஸ்பிட்டல்ல கிடக்கிறார். பட் இடையில் ஒரு தடவை கான்ஷியஸ் வந்தபோது டாக்டர்கிட்ட ரெண்டு வார்த்தை பேசியிருக்கார்."

"என்ன பேசினார்...?"

"கொலையாளி ஆணாக இருக்கும்ன்னு எனக்குத் தோணலை. என்னை கட்டிப்பிடிச்சு சண்டை போட்டபோது அது ஒரு பெண்ணோட உடம்பு என்பதை எனக்கு உணர்த்தியது. வெகு சாமர்த்தியமாய் ஆண்வேடம் போட்ட ஒரு பெண்தான் கொலையாளியா இருக்க முடியும்ங்கிறது இன்ஸ்பெக்டர் கிஷோரின் ஸ்டேட்மெண்ட்."

"அப்படீன்னா கொலையாளி ஒரு பெண்."

"மே... பி..."

"அந்தப் பெண் யார்ங்கிறது மல்லிகை மன்னனுக்கு ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம் இல்லையா...?"

"அந்த ஆள் வரட்டும். விசாரணை பண்ணிப் பார்க்கலாம்..."



மல்லிகை மன்னனுக்காக காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

அடுத்த சில நிமிடங்களில் மல்லிகை மன்னன் இரண்டு கான்ஸ்டபிள்களுக்கு மத்தியில் அலட்சியமாய் நடைபோட்டுக்கொண்டு மார்ச்சுவரிக்குள் நுழைந்தார்.

நாற்பது வயது இருக்கலாம். காதோர கிருதாவும் மீசையும், ஃபிஃப்டி பர்ஸண்ட் நரை வாங்கியிருந்தது. வெள்ளி ஃப்ரேமிட்ட கண்ணாடி, பளீர் வெள்ளையில் ஜிப்பா வேஷ்டி. முகத்தில் போலீஸில் மாட்டிக் கொண்ட பயமோ கலவரமோ இல்லை. நிமிர்ந்து எல்லோரையும் பார்த்துக்கொண்டு வந்தார்.

குணசேகர் அவரைக் கூட்டிக் கொண்டு போய் மேனகாவின் உடலைக் காட்டினார்.

"இது மேனகாதானே...?"

மல்லிகை மன்னன் இடதுகை ஆட்காட்டி விரலால் தன் மூக்கை சொறிந்து கொண்டே அலட்சியமாய் சொன்னார்.

"செண்ட் பர்ஸண்ட் மேனகாதான். போதுமா? இதோ பாருங்க இன்ஸ்பெக்டர்...! இந்த மேனகா கேஸ்ல நீங்க எனக்குத் தண்டனை வாங்கித் தர முடியாது. காரணம் மாநிலத்திலும் எங்க ஆட்சி. மத்தியிலும் எங்க ஆட்சி. சட்டத்தை எப்படி வளைச்சா எனக்கு விடுதலை கிடைக்கும்கிற வித்தை என்னோட வக்கீல்களுக்கு தெரியும். மேனகாவுக்கு வேண்டிய யாரோ பழி வாங்கறதா நினைச்சுகிட்டு தேவேந்திரனையும் ஜீவரத்தினத்தை யும் தீர்த்துக்கட்டியிருக்காங்க. ஆனா அந்த எதிரி என்னை நெருங்க முடியாது. இப்போதைக்கு நீங்க என்னைப் பதினைந்து நாள் காவல்ல வைக்க முடியும். பதினாறாவது நாள் நான் ஜாமீன்ல வெளி வந்துடுவேன். ஜாமீன்ல நான் வெளியே வந்ததும் நான் பண்ணக்கூடிய முதல் காரியம், அந்த எதிரியைத் தேடிக் கண்டுபிடிச்சு அழிக்கிறதுதான். இதை நான் பகிரங்கமாகவே சொல்றதுக்குக் காரணம் எனக்கு யார்கிட்டேயும் எந்த பயமும் கிடையாது."

குணசேகர் கோபமாய் நிமிர்ந்தார். "நீ கொடுத்த ஸ்டேட்மெண்ட் இன்னமும் உயிரோடு அப்படியே

இருக்கு....அதை வெச்சே... உன்னை...?''

மல்லிகை மன்னன் சிரித்தார். ''ஸ்டேட்மெண்ட்டுக் கெல்லாம் கோர்ட்ல மதிப்பே கிடையாது இன்ஸ்பெக்டர். ஜட்ஜ்கிட்ட நான் வாய்மொழியா சொல்ற ஸ்டேட் மெண்ட்தான் எடுபடும்... இது நம்ம ஆட்சி. நம்ம கோர்ட், எனக்கு ஒரு ரூபாய்கூட அபராதம் விதிக்க முடியாது.''

''ஸாரி மிஸ்டர் மல்லிகை மன்னன்...'' தனக்குப் பின்னால் ஒலித்த பெண்குரல் கேட்டு மல்லிகை மன்னன் துணுக்குற்றுப்போய் திரும்பிப் பார்க்க....

ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா கண்களில் கனல் பறக்க நின்றிருந்தாள்.

''என்னம்மா பத்திரிகை பொண்ணு அப்படி பார்க்கிற...? ஏதாவது டயலாக் சொல்லப் போறியா? 'நீதி வெல்லும் நியாயம் வெல்லும்' என்கிற பழைய டயலாக்கெல்லாம் வேண்டாம். கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சு. புதுசா ஏதாவது சொல்லு...''

நிவேதிதா ஓரடி முன்னால் வந்தாள். ''நான் சொல்லப் போறதில்லை. செய்யப் போறேன்'' என்று சொன்னவள் தன் கையில் வைத்து இருந்த டம்பப் பையைத் திறந்து விருட்டென்று எதையோ உருவி எடுத்தாள்.

இட்டாலியன் மேக் பிஸ்டல். குணசேகரும் பராந்தகனும் திடுக்கிட்டுப் போய் ''நிவேதிதா! என்ன இது...?'' என்று கேட்டுக் கொண்டே அவளை நோக்கி வர்முயல நிவேதிதா கர்ஜித்து பின்வாங்கினாள்.

''ஸாரி... இன்ஸ்பெக்டர்ஸ்! மூன்றாவது கொலையையும் போலீஸுக்கு தெரியாம பண்ணனும்னு நினைச்சேன். இந்த மார்ச்சுவரியில் சாகணும்கிறதுதான் மல்லிகை மன்னனோட தலையெழுத்து. இவனை மாதிரியான அரசியல்வாதிகளை கோர்ட் தண்டிக்கும்னு எதிர்பார்க்கிறது நம்ம தப்பு. என்னைப் பொறுத்தவரைக்கும் இந்த மார்ச்சுவரிதான் உச்சநீதிமன்றம். நான் கொடுக்கப் போகிற தீர்ப்புதான் உண்மையான தீர்ப்பு.''

மல்லிகை மன்னன் செய்வதறியாமல் திகைத்து வியர்த்து வழிந்து கொண்டிருக்கும் போதே நிவேதிதா தன் துப்பாக்கியின் ட்ரிக்கரை சுண்டினாள்.

சைலன்ஸரின் உபயத்தோடு சத்தமில்லாமல் பீறிட்ட



தோட்டா மல்லிகை மன்னனின் மார்புக்குள் துல்லியமாய் பாய ரத்தம் சிதற துள்ளி விழுந்தார்.

தட்டுத் தடுமாறிக் கொண்டு எழ முயன்றவரின் தலையில் இரண்டாவது தோட்டா பாய முகம் முழுவதும் கோடு கோடாய் ரத்தம் வழிய நிவேதிதாவைப் பார்த்துக் கொண்டே சரிந்தார். சில விநாடிகளில் நிசப்தமானார்.

நிவேதிதா மூச்சிரைத்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் பராந்தகனிடம் திரும்பினாள்.

''ஸார்...! மேனகா என்னோட பால்ய காலத்துத் தோழி. அவ தேவேந்திரனை காதலிச்ச விஷயம் எனக்குத் தெரியும். பெங்களூர்ல இருக்கிற ஒரு ஹாஸ்பிட்டலுக்கு அவ நர்ஸா போய் ஜாய்ன் பண்ற விஷயம் எனக்குத் தெரியும். மார்ச் முப்பதாம் தேதி என்கிட்ட சொல்லிட்டுத் தான் புறப்பட்டா..... ஒரு வாரம் கழிச்சு நான் இந்த பெங்களூர் ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்ணிக் கேட்டபோது மேனகா அங்கே வேலையில் ஜாய்ன் பண்ணலைங்கிற அதிர்ச்சியான விஷயம் கிடைச்சது. நான் உடனே தேவேந்திரனைப் போய் பார்த்து விபரம் கேட்டேன். அதுக்கு அவன் 'மேனகா ஏதோ மனக்குழப்பத்துல இருக்கா. நிறைய பொய் சொல்றா. அவ வடநாட்டு பக்கமா போய் ஏதாவது ஒரு ஹாஸ்பிட்டல்ல ஜாய்ன் பண்ணியிருக்கலாம்ங்கிறது என்னோட எண்ணம், கொஞ்ச நாள் வெயிட் பண்ணிப் பார்க்கலாம்'னு சொன்னான். எனக்கு அவன் மேலே லேசா சந்தேகம் வந்தது. பட் அதை காட்டிக்காமே அவனை அப்ஸர்வ் பண்ண ஆரம்பிச்சேன், ஆரம்பத்துல எந்த பிடியும் கிடைக்கல,... போகப் போக விஷயம் பிடிபட்டது. மேனகாவோட விஷயத்தில் அரசியல் கலந்திருந்த காரணத்தால் போலீஸுக்கு போனா சரியான ஒத்துழைப்பு கிடைக்காதுன்னு நினைச்சு, நானே மேனகாவைக் கண்டு பிடிக்க முயற்சி பண்ணினேன். அந்த முயற்சியில் அவளை உயிரோடு என்னால பார்க்க முடியலை.

மேனகாவோட மரணத்துக்கு தேவேந்திரன், ஜீவரத்தினம், மல்லிகை மன்னன் இந்த மூணு பேரும்தான் காரணம்ங்கிறதை தெரிஞ்சுக்கிட்டு, இந்த மே முதல் தினம் என்னோட சூரசம்ஹாரத்தை ஆரம்பிச்சேன்.

என்னோட உயரமும் உடம்புவாகும் ஒரு ஆணுக்கு சமமாயிருக்குன்னு பல பேர் சொல்லியிருக்காங்க. பைக் ஓட்ட தெரிஞ்ச நான் ஒரு ஆணா மாறி தேவேந்திரனை மொதல்ல கல்யாண மண்டபத்துல தீர்த்துக் கட்டினேன். சாயந்தரம் ஜீவரத்தினத்தோட கதையை முடிச்சேன். இன்னிக்கே மல்லிகை மன்னனையும் முடிக்க வாய்ப்பை எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன். அந்த வாய்ப்பு இப்படி மார்ச்சுவரியில் கிடைக்கும்ன்னு நான் எதிர்பார்க்கலை. ஆரம்பத்துல சட்டத்தோட பிடியிலிருந்து தப்பிச்சுடணும்ங்கிறதுக்காக கேஸை திசை திருப்ப ஒரு கைதி தப்பிச்சுப் போனதை பெரிய அளவில் பூஸ்ட் பண்ணி சந்தேகத்தை அந்த கைதி பக்கமா டைவர்ட் பண்ணப் பார்த்தேன். அது சரியா ஒர்க் அவுட் ஆகலை. அதுக்கப்புறம் என்னோட மனசாட்சியில் லேசா ஒரு உறுத்தல். சட்டத்தை ஏமாத்தறது சரியில்லை. மல்லிகை மன்னனை முடிச்ச கையோடு போலீஸில் சரணடைஞ்சுடணும்னு நினைச்சுட்டிருந்தேன். மல்லிகை மன்னனுக்கு இவ்வளவு சீக்கிரம் இப்படியொரு முடிவு கிடைக்கும்ன்னு நானே எதிர்பார்க்கலை.'' பேசி முடித்த நிவேதிதா தன் கையில் வைத்திருந்த பிஸ்டலை பராந்தகனிடம் நீட்டினாள். அவர் அந்த பிஸ்டலை ஒரு கைக்குட்டையால் வாங்கிக் கொண்டே அதிர்ச்சியாய்ப் பார்த்தார்.

''நீ ஒரு ப்ரஸ் ரிப்போர்ட்டரா இருந்துகிட்டே ஒரு கொலைகாரியா மாறியிருக்கே. நான் இதை எதிர்பார்க்கலை.''

''ஸார்...! நான் பண்ணினது கொலைகள் இல்லை. என்னோட கோர்ட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேரின் தண்டனைகளை இந்த மே மாதத்தில் நிறைவேற்றியிருக்கிறேன். அவ்வளவுதான். மேனகா, மே மாதம் இந்த ரெண்டு வார்த்தைகளைக் கேட்டாலே இனிமே தப்பு பண்றவங்களுக்கு பயம் வரணும். வரணும் என்ன... கண்டிப்பா வரும். ஸ்டேஷனுக்கு போலாமா ஸார்...?''

(முற்றும்)